பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 24 வியாழக்கிழமை (06-05-2004) தொலைபேசி - 2223378 ஒலி 139

## தலைவர் பிரபா - ஜோன் பீற்றர்சன் அடுத்த வாரம் வன்னியில் சந்திப்பு

### சமாதான முயற்சி குறித்து ஆராய்வர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நோர்வே



யின் வெளிவிவகார அமைசசர் ஜோன் பீற்றர்சன் அடுத்த வாரம் சந்தித்து பேசவுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் எதிர்வரும் திங்கட் கிழமை இலங்கைவரும் அமைசசர் ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்து பேச்சு நடத்தியபின்னர் விடுதலைப் புலிகளின் தலைவரை சந்தித்து பேச்சுநடத்த திட்டமிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர்



அன்ரன்பாலசிங்கமும் கலந்து கொள்ளுவர். சமாதான முயற்சிகளை

(12ம் - பக்கம் பார்க்க)

## எரிக் சோல்ஹெய்ம் நேற்று இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்றிரவு இந்தியா விற்கு சென்றுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சி தொடர்பாக இந்திய அதிகா ரிகளுக்கு விளக்கும் முகமாகவே அவரது இந்திய விஜயம் அமைந் துள்ளது.

சமாதான முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப் பாடு, மற்றும் இலங்கை அரசின் நிலைப்பாடு என்பன குறித்தும் சமாதான பேச்சுவார்த்தையின் அடுத்தகட்ட நகர்வு குறித்தும் இந்திய வெளியுறவு அமைச்சர், மற்றும் அதிகாரிகளுக்கு விளககிக் கூறும் முகமாகவே சோல்ஹெய்ம் அங்கு சென்றுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் இலங்கைக்கான இந்திய தூதுவர் நிருபன் சென்னை தூரகத்தில் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்தும் கலந்துரை யாடியி ருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (த-121)

## சமாதான முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும்

# பேச்சுக்கு உதவ அமெரிக்கா தயார்



## அமெரிக்க தூதுவர் பிரதமரிடம் தெரிவிப்பு

(நமது நிருபர்)



**இலங்கை அரசிற்கும் விடுதலை புலிகளுக்கும் இடையே மீண்டும் சமாதான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு தேவையான ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் அமெரிக்கா வழங்க தயாராகவே உள்ளது. இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜெப்பிரிலான்ஸ்ரோ உறுதியளித்துள்ளார்.**

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும், அபிவி ருத்தி புனரமைப்பு குறித்தும் அமெ. தூதுவர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று மாலை பேச்சு நடத்தினார்.

இசசந்திப்பின் போதே அமெரிக்க தூதுவர் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படு வதற்கான உதவிகள் குறித்து மேற்கண்டவாறு உறுதியளித் துள்ளார்.

இலங்கையில் தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதையே அமெரிக்கா விரும்புகிறது. சமாதா னத்தை உருவாக்கும் பேச்சுவார்த் தைகள் உடனடியாக ஆரம்பிக்கப் பட வேண்டும். இதனை ஆரம்பிக்க அவசியமான பூரண ஒத்துழைப்பை வழஙகுவதற்கு அமெரிக்கா தயாரா கவே இருக்கிறது.

இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை பாதுகாத்து நாட்டின் ஒருமைப்பாட்டை பேணுவதற்கு அமெரிக்கா என்றெ ன்றும் ஒத்துழைப்பு வழங்கும்.

இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றும் வகை யில் அமெரிக்கா இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான உதவிகளையும் வழங்கத் திட்ட மிட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு சமா தானம் அவசியமாகையால் சமாதான முயற்சிகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் பிரதமரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 12ம் திகதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்கா வுக்கு விஜயம் செய்யவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## க.பொ.த. உயர்தர பரீட்சை இன்று

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது.

நாடெங்கிலும் இருந்து சுமார் 2 லட்சத்து 40 ஆயிரத்துக்கு மேற் பட்ட பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங் களாக செயற்படும் ஆயிரத்து 765 தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசா லைகள் யாவும் எதிர்வரும் 31ம் திகதி உயர்தரப் பரீட்சைகள் நிறைவு பெற்றதன் பின்னர் ஜூன் மாதம் 3ம் திகதி மீண்டும் இரண்டாம் தவணைக்காக திறக்கப்படவுள்ளன. (உ-61,10)

## இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இறுதிவடிவம் பெறுகிறது

(கொழும்பு)

இந்தியாவில் தேர்தல் நிறைவு பெற்றதும் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத் தாகும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் விதமாக அமைந்துள்ள மேற்படி பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு இறுதி வடிவம கொடுப்பதற்குரிய நடவடிக் கைகள் தற்பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் ஒப்பந்தம் தொடர்பான அடிப்படை நிகழ்ச்சி

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

நிரல் இலங்கையால் தயாரிக்கப் பட்டு அது இந்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பிவைக்கப் பட்டுள்ளள நிகழ்ச்சி நிரல் இந்திய பாதுகாப்பு துறை அதிகாரிகளால் பார்வையிடப்பட்டு அதில் மேற் கொள்ளப்படும் திருத்தங்களுக்கு ஏற்ப பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான இறுதி நிகழ்சசி நிரல் தயாரிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையிலேயே ஒப்பந் தம் தொடர்பிலான சகல விட யங்களும் முன்னெடுக்கப்படும். எனவும் மேலும் தெரிவக்கப்படு கிறது.

இதேவேளை மேற்படி ஒப்பந் தத்தில் இராணுவப்பயிற்சி, புலனாய் வுத்துறை, தகவல் பரிமாற்றங்கள் ஆயுத உதவிகள் என்பன உள்ள டக்கப்பட உள்ளமையும் குறிப்பிட த்தக்கது. (உ-4,60)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவழிக்கையை ஐ.தே.க. எதிர்க்காது

### எரிக் சோலிடம் - ரணில் உறுதி

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் எதிர் கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்காவை சந்தித்து பேசியுள்ளார். நேற்று முற்பகல் 10.30 மணியள வில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முன்னெ டுக்கவுள்ள சமாதான பேச்சுவார் த்தைகள் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து அறியும் முகமாகவே இச் சந்திப்பு இடம் பெற்றது.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளுடன்

(12-ம் பக்கம் பார்க்க)

## வல்லைப்பாலம் பெரும் சேதம்

(யாழ்ப்பாணம்)

வல்லைப்பாலத்தின் ஒரு பகுதி சேதமாகியுள்ளது. நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாகவே பாலம் சேதமாகியுள்ளது. இதனால் அப்பாதையினூடான போக்குவரத்தை பயணிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படும் இப் பாலம் நீண்டகாலமாக திருத்தப்படாமல் காணப்படுகிறது. (ச)

# இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா கூட்டு இலங்கையை இன்னோர் ஈராக் ஆக்குமா?

ஈராக் நோக்கி அமெரிக்கா யுத்தத்தை ஆரம்பிக்க முன்பு போட்ட நாடகம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அதாவது இரசாயன ஆயுதம், அது, இது என்று சொல்லி சும்மா இருந்த சதாமையும் துரத்தித் துரத்தி அடித்து ஈராக்கிய மக்களின் வாழ்வை நாசமாக்கியவர்கள், நாசமாக்கிக் கொண்டிருப்பவர்கள் அதுமட்டுமல்ல இவர்கள் கைபோடாத அரசாங்கங்கள் உலகில் இல்லை எனலாம்.

ஆனால், இவற்றில் உள்ள புதிய விடயம் என்னவெனில் இந்த முறை இந்தியாவையும் தங்கள் கூட்டில் இணைத்துக் கொண்டுள்ளார்கள். இவர்கள் எல்லோரும் போருக்காகப் பயன்படுத்தும் பணம் அவர்கள் பரம்பரையாகச் சேர்த்துவைத்த பணமல்ல. அந்தந்த நாட்டு மக்கள் வேர்வை சிந்தி உழைக்கும் போது அறவிடப்படும் வரிப்பணமே. ஆகவே, தமது நாட்டு மக்களுக்குக் கணக்கு சொல்லியே ஆகவேண்டும். அதாவது தாங்கள் செய்யப்போகும் ஒரு செயலுக்காக இப்போதிருந்தே தமது மக்களைத் தயார்படுத்துகிறார்கள் என்பதே உண்மை.

இதனால் தான் தாங்கள் செய்யும் யுத்தம் எல்லாவற்றையும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்று பிரகடனப்படுத்தி, தமது மக்களைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். நாளுக்கு நாள் இவர்களே பயங்கரவாதிகளை உருவாக்கியும் அதன் பயங்கரத்தால் நிம்மதி இழந்தும் தவிக்கிறார்கள் என்ற உண்மை இவர்களுக்குப் புரியவா போகின்றது ?

### தமிழர்க்கு எதிரான யுத்தம்

அப்படியானால் உண்மையாகவே இந்த இந்திய, பிரித்தானிய, அமெரிக்க கூட்டுப்படை தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை செய்யப் போகின்றனவா?

இந்தியா ஏற்கனவே சூடு கண்ட பூனை. ஆகவே, இந்தியா நேரடியாகத் தலையிடாமல் விடலாம், ஆனால் பல ஆண்டுகளாக தமிழருக்கு எதிராக இயங்கியதை மறைக்க முடியாது. அவற்றில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 மூத்த புலிகளை கைது செய்து இலங்கை அரசிடம் ஒப்படைக்க முனைந்த போது அவர்கள் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டமையும், பிரதித்தலைவராக இருந்த மாத்தையாவை தலைமைத்துவத்திற்கு எதிராக மாற்றியமையும், கேணல் கிட்டுவை கப்பலோடு கைது செய்ய முயற்சித்த போது அவர்கள் தற்கொலை செய்து கொண்டதும், சமாதான காலத்தில் புலிகளின் இரண்டு சரக்குக் கப்பலையும் அதிலிருந்த வீரர்கள் மூழ்கடிக்க உதவியமையும், கருணா விடயத்தில் அதிக ஆர்வம் காட்டி முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டு குதூகலித்தவர்களும் தான் இந்திய அரசும், அதனோடு சேர்ந்த புலனாய்வுப் பிரிவினரான றோ அமைப்பும் என்பதை தமிழருக்கு நினைவில் இல்லாமல் இல்லை. அது மட்டுமல்ல கண்ணிவெடி அகற்றுவதற்காக இந்திய இராணுவத்தின் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் வவுனியாவில் வந்து நிலைகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்கா முயற்சி

பிரித்தானியா இதுவரை பெரியளவில் முயற்சிகள் எதுவும் செய்ததாக இல்லை. இருப்பினும், இவர்கள் அமெரிக்காவின் மூதாதையர் என்பது உலகறிந்த உண்மை. அப்படியானால் அமெரிக்கா முயற்சி செய்ததா? இல்லை என்று சொல்ல முடியாது. ஏனெனில் முன்னைய காலங்களில் இலங்கை இராணுவத்திற்காக களத்தில் நின்று கூட வேலை செய்தவர்கள், கோடி கோடியாக பொருள் உதவி செய்தவர்கள், சமாதான காலத்திலும் கூட பல பாதுகாப்பு ஒப்பந்தம் செய்தவர்கள், இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் வரவேண்டும் என்று மிரட்டியவர்கள், பேச்சுக்கு வந்திருந்தால், வட-கிழக்குக்கு அதிக தொகையைத் தந்திருப்போம் என்று ஆசை காட்டியவர்கள், கருணாவுக்காக வக்காளத்து வாங்கியவர்கள் என்பதோடு கருணாவின் எண்ணத்திற்கு வித்திட்டவர்கள் என்று சொல்லப்பட்டது.

இவை எல்லாம் நேரடியாக செய்ததாக எல்லோரும் அறிந்திருந்தாலும், மறைமுகமாக நம்மவர்களைக்கொண்டு செய்த பல காரியங்கள் உண்டு. அவற்றையும் விரைவில் புரிந்து கொள்வீர்கள். ஆக மொத்தம் இதுவரை பல கருமங்கள் செய்தாகிவிட்டது. அவற்றில் சிலவற்றை இப்போது நேரடியாகப் பார்க்கக் கூடியதாகவும் உள்ளது. யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு 20 இராணுவ வைத்தியர்களும் 10 உதவியாளருமாக 30 பேர் இரண்டு கிழமை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து 200 நோயாளிகளுக்கு வைத்தியம் செய்ய உறுதி அளித்துள்ளார்கள். அதுமட்டுமல்ல அங்கிருந்து கொண்டுவந்த அனைத்துப் பொருட்களையும் வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்போவதாகவும் உறுதியளித்துள்ளார்கள். (திரும்பிப்போகும் போது தான் சென்று பார்க்க வேண்டும் போதனா வைத்தியசாலையிலா அல்லது இராணுவ வைத்தியசாலையிலா விட்டுச்சென்றார்கள் என்று) இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் சுகாதார அமைச்சால் நியமிக்கப்படும் புதிதாக வெளியேறிய யாழ். மருத்துவர்கள் 39 பேருக்குரிய வெற்றிடம் யாழ்ப்பாணத்தில் இருந்தும் 18 பேருக்கு மட்டுமே இங்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு கூறப்பட்ட காரணம் தெற்கில் வைத்தியர் போதாமை என்பதாகும்.

### இராணுவ வைத்தியர் வருகை

இந்த இராணுவ வைத்தியர்களின் வருகை தொடர்பாக ஏற்கனவே வருகை தந்த அமெரிக்க தூதுவரால் பெப்ரவரி மாதத்திலேயே வைத்தியசாலை வட்டாரங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க இராணுவ வைத்தியர்கள் திட்டமிட்டபடி யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அப்படியானால் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அமெரிக்காவின் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தவில்லை. ஆக அமெரிக்காவையும், தமிழர்களைப் பொறுத்தவரையும் இலங்கையின் இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் ஒரே கொள்கையையே கொண்டிருந்தன என்பதும் வெளிப்படையாகின்றது. அப்படியானால் புதிதாக செல்வாக்கு செலுத்துகின்ற ஜே.வி.பிக்கு இந்த விடயம் தெரியுமா? ஆம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அம்மையார் நோர்வேயை மீண்டும் பேச்சுக்கு அழைக்கும் போது இதுவரை காலமும் நோர்வேக்கு எதிராகத் துள்ளிக் குதித்தவர்கள் அடக்கமாக நின்று வரவேற்கும் போதே விளங்குகின்றது. அவர்களுக்கும் இந்த சம்பவங்கள் தெரியும் என்பது இந்திய, பிரித்தானிய, அமெரிக்க கூட்டு, தமிழர் பிரச்சனையை ஈராக்கைப்போல் கையாளுமா? அல்லது இஸ்ரேலுடன் நின்று பலஸ்தீனத்திற்கு எதிராக செயற்படுவது போல் இயங்குமா? இல்லை எல்லாவற்றையும் விட புதிய முறை ஒன்றைக் கையாளுமா? எல்லாவற்றையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். □

# சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிப்பது சாத்தியமில்லை

## ஆர்வமுள்ள போதும் துரிதம் போதாது- எரிக்சொல்ஹெய்ம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப புலிகளுக்குமிடையே சமாதான பேச்சுக்களை ஆரம்பித்து வைப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் உடனடியாக இல்லை என நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நோர்வே தூதராக அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ரொய்டர் நிறுவனம் செய்தி வெளியிடடுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் சமாதானப் பேச்சுக்களைத் தெடர்வதில ஆர்வமாக உள்ளபோதிலும் துரிதமாக நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இரு சாராரதும் கொள்கை முண்பாடுகள் முட்டுக் கட்டையாக இருந்து வருகின்றன.



இதனால்,பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. இதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரும் மத்தியஸ்தம் வகிக்கும் அனுசரணையாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் எரிக் சொல் ஹெய்ம் கூறியிருபபதாக அச செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை புதிய அரசிற்கும் புலிகளுக்குமிடையான சமாதானப் பேசசுக்கள் குறித்து ஆராய்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த எரிக் சொல்ஹெய்ம் நேற்று நோர்வே பயணமானதுடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள மையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-4,60)

# கந்தப்பொல சம்பவத்தைக் கண்டித்து கோட்டையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நுவரெலியா கந்தப்பொல வில் கடந்தவாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்து நாளை மறுதினம் சனிக்கிழமை கொழும்பு கோட்டை ரயில் நிலையத் துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த மேல்மாகாண மக்கள் முன்னணி தீர்மானித் துள்ளது.

இதேவேளை, கந்தப்பொல வில் கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்து கடந்த திங்கட்கிழமை மலையகம் முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டம் மேற் கொள்ளப்பட்டமை குறிப் பிடத் தக்கது. (உ-61,10)


## 31ம் நாள் நினைவஞ்சலி

02 05 1929



06 04 2004

### நடராசா சண்முகலிங்கம்

திதி: 06.05.2004

சீர் சுபானு திங்கள் திகழ் பங்குனி மாத அபரபக்க பிரதமை புனிதநாள் - சீர்சால் சண்முகலிங்கம் எழுபத்தைந்து அகவையில் பதமலர் சேர்ந்தான் பணிந்து

நடராசா சண்முகலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம.

சம்பியன் லேன், கொக்குவில்

நன்றி.

இங்ஙனம் குடும்பத்தினர்.

(C.163)


# நாளை மாலையுடன் காலநிலை சீராகும்

## வளி மண்டலத் திணைக்களம் தகவல்

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்துவரும் மழை படிப்படியாகக் குறைவடைந்து நாளை வெள்ளிக்கிழமை மாலை யுடன் காலநிலை சீராக்கும் என யாழ். வளிமண்டலத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு அண்மையில் வாங்காள விரிகுடாவில் மையம் கொண்ட தாழமுக்கம் தற்போது அரபிக் கடலை நோக்கி நகர்ந் திருப்பதால் மழையின் தாக்கம் குறைவடையும் சாத்தியம் உண் டெனவும் எனினும், இன்று அவ் வப்போது மழை பெய்வதுடன் ஏனைய நேரங்களில் வானம் மப்பும் மந்தார முமாகக் காணப்படும் என்றும் தெரி விக்கபபட்டது.

இதேவேளை கடந்த 2ஆம் திகதி காலை 9மணி முதல் நேற்றுநண்பகல் வரை 150 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

இதில் கடந்த 2ஆம் திகதி காலை 9மணி முதல் 3ஆம் திகதி காலை9மணி வரையான 24 மணி நேரத்தில் 133.9 மி.ம மழையும் 3ஆம் திகதி காலை 9மணி முதல் 4ஆம் திகதி காலை 9மணிவரையான 24மணி நேரத்தில் 7.6 மி.மீ.மழையும் 4ஆம் திகதி காலை 9மணி முதல் நேற்றுக் காலை 9 மணி வரை 3.9 மி.மீ.மழைவீழ்ச்சியும் நேற்றுக்காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை 4.6 மி.மீ.மழை வீழ்ச்சியும் அடங்குகிறது. (உ)

# சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி காலக்கெடு விதித்தது

மே மாதம் 20 ஆம் திகதிக்கு முனனர் எதென்ஸ்ஒலிம்பிக் ஸ்ரேடிய சேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் இல்லையேல் பிரதான மண்டபக் கூரை அமைக்கும் பணிகளை கைவிட வேண்டும் என்று கிரேக்க அரசாங்கத்திற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி காலக்கெடு விதித்துள்ளது.



18.000தொன் உருக்குக் கம்பிகளால் அமைக்கப்படும் இந்தடோமின் வேலைகள் மிகவும் தாமதம் அடைவதையிட்டு ஒலிம்பிக் கமிட்டி கிலேசம் அடைந்துள்ளது. ஆகஸ்ட் 13 திகதி ஆரம்பமாகவுள்ள போட்டிகளுக்கு முன் எல்லாமே தயாராகிவிடும் என்று அரசாங்கம் அறிவித்த போதும் ஒப்பந்தக் காரர்களின் கருத்துமாறுபடுகிறது.

ஏற்கனவே ஏப்ரல் 28 திகதி முதலாவது காலக்கெடுவாக அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது காலக்கெடு முடிவதற்குள் வேலைகளை பூர்த்தியாக்க முடியாது என்றும் இன்னும் காலம் தேவைப்படும் என ஒப்பந்தக் காரர்கள் அறிவித்துள்ளனர். இந்நிலையில் ஒலிம்பிக் போட்டிகள் குறித்து பாரிய நிச்சயமற்ற தன்மை தோன்றியிருப்பதாக அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (யே-10,68)



உலக ஸ்னூக்கர் சம்பியன் றொனி ஓ சலிவன் தனது தாயார், சகோதரி சகிதம் வெற்றிக்கிண்ணத்தோடு காணப்படுகிறார்.

# தாரகைகளைத் தாக்கிய ரோமன் ஆதரவாளர்கள்

நேற்று முன்தினம் இத்தாலியில் இடம்பெற்ற மிகப் பரபரப்பான உதைபந்தாட்டப்போட்டியில் ஏ.சி.மிலான் விளையாட்டுக் கழக நட்சத்திர வீரர்கள் தாக்கப்பட்டனர்.


பிரேஸில் நாட்டு உதைபந்தாட்ட அணியின் மிக நீண்ட நாள் தலைவரும் ,(Silent star)அமைதித தாரகை என்று உலக உதை பந்து ரசிகர்களால் அழைக்கப்படுபவருமான க∴புடைடா மற்றும் இத்தாலிய நட்சத்திரமான பவோலா மல்டினி ஆகிய மூவரும் ஏ.சி மிலான் கழகத்திற்காக அற்புதமாக விளையாடித் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டு 3-2 என்ற கணக்கில் "ரோமா "கழகத்தை தோற்கடித்தனர்.



போட்டிமுடிவடைந்து வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறத் தொடங்கும் போது ரோமாக்கழக ஆதரவாளர்கள் கற்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் தீப்பந்தங்களை அவர்கள் மீது எறிந்து தமது ஆத்திரத்தைப் கொட்டித் தீர்த்தனர். ஸ்தலத்திற்குவிரைந்த பொலிஸார் வீரர்களைக் காத்ததுடன் தடியடிப் பிரயோகம் நடத்திய சிலரை கைது செய்தனர். (யே)

# சிம்பாப்வே குழப்பம் தொடர்கிறது குழந்தை அணியினர் களத்தில்

இலங்கையுடனான முதலாவது டெஸ்ட் தொடரில் விளையாட இன்று களம் இறங்கும் சிம்பாப்வே அணியின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.



பயிற்றுநர் ஜொவ் மார்ஷ்

முன்னதாக ஒருவித இணக்கப்பாட்டுடன் அணியில் சேர்க்கப்பட்டிருந்த ஹீத்ஸ்ரிக் ,ரே பிறைஸ், சீன்ஏர்வின் மற்றும் ரேவோ கிறைப்பர் ஆகிய நான்கு முன் னணி வெள்ளையின வீரர்களும் மீண்டும் அணியை விட்டு வெளி யேறிவிட்டனர்.

தங்களுடைய கோரிக்கைகள் உரிய முறையில் கவனத்தில் எடுக்கப்பட்டு கையாளப்பட வில்லை என்றும் ஹீத்ஸ்ரீக் தான் அணியின் தலைவராக விளங்க வேண்டும் என்றும்மூன்று கோரிக் கைகளும் நிறை வேற்றப்படாத பட்சத்தில் தாம் விளையாடப் போவதில்லை என்று கிராண்ட் பிளவர் அறிவித்தார்.

முன்னாள் அவுஸ்திரேலிய டெஸ வீரரும் சிம்பாப்வே அணியின் பயிற்று விப்பாளருமான ஜொவ் மாஸ் தங்களது பிரச்சினை தொடாபில் உலகின் கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டார். அவர்தனது ஒப்பந்தப் பணத்தை பற்றியே கரிசனை கொள்கிறார் என்றும் பிளவர் குற்றம் சாட்டினார். ஆனால் தனது பணி தெரிவு செய்யப்பட்ட வீரர்க ளுக் குப் பயிற்சி அளிப்பதே என்று மார்ஸ் தெரிவித்தார். (யே-10,68)



ஹீத் ஸ்ரீக்

# புதிய அறிமுகங்களுடன் போர் மியூலா 1 கார்கள்

2006 ஆம் ஆண்டு தொடக்கம் உலகின் அதிவேக கார்ப்பந்தைமான போர்மியூலா 1 பந்தையங்களில் பாவிக்கப்படும் கார்களில் அதிரடிமாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக போர் மியூலா 1ன் தலைவர் மக்ஸ் மோஸ்லி அறிவித்துள்ளார்.



இதனடிப்படையில் போட்டியில் பங்கெடுக்கும் எல்ல கார்களுக்கும் ஒரே நிறுவனமே ரயர்களை வழங்கவும் சிறியரக எஞ்சினகளே பாவிக்கப்படவும் வேண்டுமென்பதில் எல்லாக் கழகங்களின் தலைவர்களும் சம்மதம் தெரிவித்துள்ளதாக அறிவித்துள்ளார் மோஸ்லி. இதன்மூலம எல்லாச்சாரதிகளும் சமநிலை யிலிருந்து போட்டியிட முடியுமென்றும் இத்னால் கடந்த நான்கு வருடமாக முன் னணியில் இருக்கும் பெராரி அணியின் ஜேர்மன் சாரதி மைக்கல் சூமாக் கரின் ஆதிக்கத்தில் பாதிப்பு ஏற்படவும் கூடும் என்றும் அறிவிக்கப் படுகிறது.

அதிக பணபலம் வாய்ந்த இத்தாலியின் பெராரி நிறுவத்தோடு தாயரிப்பு ரீதியில் மோதமுடியாத எடியோர்டன் போன்றவர்கள் இதனை வரவேற்றிருப்பது ஆச்சரியத்திற்குரியது அல்ல ஆனால் இவ் விணக்கப்பாடுகள் வெறும் கலந்துரையாடல் தான் என்று போர்மியூலா இயக்குநர் ஒருவர் அறிவித்தார். (யே)

# விளையாட்டுச் செய்திகள்

# ஐரோப்பியக் கிண்ண இறுதியாட்டத்தில் போட்டோ

தற்பொழுது நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கிண்ணத்திற்கான அரையிறுதிப் போட்டியொன்றில் போட்டோ அணி டிப்போட்டிவ் அணியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

ஆரம்பத்தில் மிகத்திறமையாக விளையாடிய ஸ்பெயின் நாட்டின் டிப்போட்டிவ் கழக அணியினர் 11வது நிமிடத்தில் முன்னணி வீரர் ரெல்பெட் இரண்டா வது மஞ்சள் அட்டை காண்பிக் கப்பட்டு வெளி யேற்றப்பட்ட தோடு உற்சாகமிழந்தது.



நிலைமையைப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கல் கழக மான போட்டோ அணியின் டெரலி சில்வா தலைகொடுத்த ஒரு பந்து போஸ்டில் பட்டுச் சென்றது. பெனால்டி உதை ஒன்றை அண்னளவாக அனுப்பி டெரலி சில்வா போட்டோ அணி இறுதியாட்டத்தில் நுழை வதை உறுதி செய்தார். (யே)

# டெனிஸ் லூயிஸ் பிரித்தானிய போட்டியில்

பிரிட்டனின் பிரபல ஹெப்ரத்தலன் ஓட்ட ஒலிம்பிக் சம்பியனான டெனிஸ் லூயிஸ் பிரித்தானியாவில் நடைபெறும் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கெடுப்பதற்காகத் தனது சொந்த ஊரான போர்மிஸ்ஹாமுக்கு வந்தார்.




2001ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வுதேச மெய்வல்லுநா போட்டிகளுக்குப் பிறகு தனது சொந்த ஊரில் போட்டி யொன்றில் பங்கெடுப்பது இதுவே முதற தட்வையாகும்.

இம்முறை அவர் 100மீற்றர் உயரம் பாய்தல் மற்றும் நீளம் பாய்தல் ஆகிய போட்டிகளில் பங்கெடுக்கவுள்ளார்.உலகப் புகழ் மிக்க அமெரிக்க வீராங்கனை மேரியன்ஜோன்சை அவர் யூன் 27ஆம் திகதி நடைபெறும் நீளம் பாய்தல் போட்டியில் எதிர்கொள்வார். (யே)

# கார்லோஸ் மோயாவுக்கு ரோமில் முதல் வெற்றி

தற்பொழுது ரோமில் நடைபெற்று வரும் மாஸ்டர்ஸ் கிண்ணத்திற்கான பகிரங்க டெனிஸ் போட்டிகளில் ஆர்ஜென்டீன வீரர் காலோஸ் மோயா தனது முதல் வெற்றியைப பெற்றார்.



ஸ்பெயினின் அல்பேட்டோ மார்ட் டீனுடனான ஆரம்பக்கட்டப்போட்டி யொன்றில் 6-4,6-2என்ற நேர் செற்களில்அவரைத்தோர் கடித்து மோயா வெற்றி பெற்றார். முதல் செற் றில் அல்பேட்டோ மிக விறுவிறுப்பாக ஆடினார்.ஒரு கட்டத்தில் 2-3என்று முன்நிலை வகித்தார். ஆயினும் மோயாவின் பலமான சேவிஸ்களை அவர் தடுத்தாடச் சிரமப்பட்டார். இரண்டாவது செற்றி அவர் முற்றாகவே சோர் [illegible] (யே)

# படைத்தரப்பினது நடவடிக்கைகள் சமாதானத்தை கேள்விக்குறியாக்கும்

## எச்சரிக்கிறார் எம்.பி. செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)
படைத்தரப்பினரது நடவடிக்கை



யானது இலங்கையின் சமாதான முயற்சிகளை கேள்விக்குாயதாக்கி விடுமென தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மனற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.

கந்தப்பொலவில் இடம்பெற்ற சம்பவம், கொழும்பில் படைத்தரப பினர் மேற்கொண்ட சோதனை நட வடிககைகள், சமாதான சூழ்நிலை யிலும் தமிழர்கள் கைது செய்யப் பட்டமை மற்றும் ஊடகவியலாளர் சிவராம் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை என்பவற்றை தமிழ்த்தேசியக கூட்டமைப்பு வன் மையாக கண்டிப்பதாகவும் அவர் தொவித்தார்.

சமாதானத்தினை முன்னெடுப் பதாக கூறும் ஜனாதிபதி, இவ்வா றான நடவடிக்கைகளை மேற் கொள்ள படைத்தரப்பினருக்கு உத் தரவு இடுவதானது எதிர்காலத்தில் சமாதானத்தை கேள்விக்குரியதாக்கி விடும் .

எனவே, முப்படைகளின் தளபதி யாக ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க இருப்பதால், இவ்வாறான சம்ப வங்கள் தொடர்ந்தும் இடம்பெறா மல தடுப்பது அவசியம் என்றும் சுட் டிககாட்டியுள்ளார். (உ)

## பாராளுமன்றத்தில் நெருக்கடி

# எதிர்க்கட்சி உறுப்பினர் இருவர் ஆளும்கட்சி ஆசனங்களில் அமர்வர்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் இரணடு நாடாளுமன்ற உறுப்பினர் கள் ஆளும்கட்சி ஆசனங்களில் அமரவுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் இருக்கை கள் ஒதுக்கப்படும் போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு தலா 116 இருக்கைகள் ஒதுக்கப்படுவது வழமையாகும்.

இம்முறை எதிர்க்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 118 ஆகவும், ஆளும் தரப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர்களின் எண் ணிக்கை 106 ஆகவும் காணப்படு வதை அடுத்தே,

இவவிருவரும் ஆளுமகட்சி வரி சையில அமரவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதன்படி, எதிர்க்கட்சியின் பின் வரிசை ஆசனங்களில் இதுவரை அமர்ந்திருந்த இரண்டு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஆளும்கட்சியின் ஆசனங களில் இனிமேல் அமர்ந்து கொள் ளவுள்ளதாகவும் தெரிவிக்கபபடுகி றது. (உ)

# ஒத்துக் கொண்ட நிதியை வழங்க உலகநிதி நிறுவனங்கள் மறுப்பு

## இலங்கைப் பொருளாதாரம் இக்கட்டில்

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசாங்கம் பொருளாதார ரீதியாக புதிய பல நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது.

இலங்கையின் புதிய அரசு தமது பொருளாதாரக் கொள்கைகள், தொடர்பான விபரங்களை வெளியி டாத வரையில் இலங்கைக்கான நிதியுதவிகளை நிறுத்தி வைக்க சர்வதேச நிதி நிறுவனங்கள் முடி வெடுத்துள்ளதையடுத்தே இந்த நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் படி இரண்டாவது கட்டமாக கொடுக் கப் பட வேண்டிய 80 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான நிதியுதவி களை இடைநிறுத்தி வைக்க சர்வ தேச நாணய நிதியம் முடிவு செய் துள்ளது.

இதேபோன்றே 30 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான தமது நிதியுதவிகளை இடைநிறுத்தி வைப்பதென் ஆசிய அபிவிருத்தி வஙகியும் தீர்மானித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியின் தேர்தல் அறிக் கையில கூறப்பட்ட விடயங்களை உடன டியாக நிறைவேற்றுவதானால் மிகப் பெரிய வரவு செலவுத்திட்ட பற்றாக் குறையை எதிர்கொள்ள வேண்டியிருக் கும் என்றும் கருதப்படுகின்றது.(உ-121)

# அரச நிர்வாக சேவை அதிகாரிகள் நியமனம் ஆசிரியர் தொழிற்சங்கம் ஆட்சேபம்

(கொழும்பு)
கல்வி நிர்வாக சேவையில் நில வும் வெற்றிடங்களுக்கு அரசாங்க நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிப்பதற்கான முயற்சிகள் குறிதது ஆசிரியர் தொழிற்சங்க கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன.

இலங்கை சுதந்திர ஆசிரியர் தொழிற்சங்கம் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

தற்போது கல்வி நிர்வாக சேவை யில் 280 வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இந்நிலையில் கல்வி நிர்வாக சேவையில் உள்ள உத்தியோகத் தாகளுக்கு உரிய பதவி உயர் வுகளை வழங்காமல் அந்தச் சேவை யில் உள்ள வெற்றிடங்களுக்கு வெளியாட்களை நியமிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளபபட்டு வரு கின்றன.

இதன் மூலம் கல்வித் துறையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே ஆசிரியர் ஒருவர் கல்வி நிர்வாக சேவையில் பிரவேசிக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என அந்தச் சங்கம் கேட்டுள்ளது. (உ-60,10)

## ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில்

# இலங்கை மின்சார சபையில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி அம்பலம்

(கொழும்பு)
இலங்கை மின்சார சபையில் பாரிய அளவில் நிதிமோசடிகள் இடம் பெற்றமை கண்டு பிடிக்கப்பட் டுள்ளன.

கடந்த ஐக்கிய தேசிய முன் னணி அரசின் ஆட்சிக் காலத்தி லேயே இந்த மோசடி இடம்பெற்றி ருக்கின்றது.


தனியார் கம்பனியில் இருந்து மின்சாரத்தைப பெற்ற போதே இந்த மோசடி இடம்பெற்றிருக்கின்றது.

டீசல் எண்ணெயைக் கொண்டு இயங்கு மின்பிறப்பாக்கியிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை இலங்கை மின்சாரசபை உடனடியாக பெறு வதற்கென பல உயர்மட்ட அதிகாரி கள் விடுத்த வேண்டுகோளுக்கு முன்னாள் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் அங்கீகாரம் அளித்திருந் தார்.

இலங்கை மின்சாரசபை அதி காரிகள் மிகக் குறைந்த விலை யில் 30 நாட்களுக்கு ஒரு கம்பனி யிடம் இருந்து மின்சாரத்தைப் பெறுக கூடியதாக இருந்தும் இரண்டு மடங்கு அதிகமான தொகையைச் செலவு செய்து வேறு ஓர் கம்ப னியில் இருந்து மின்சாரத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

இதற்காக 149 கோடி ரூபா பணத்தை செலவழித்து கேள்விப் பத்திரமும் கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இத்தகைய மோசடிக்கு உடன்பட மறுத்த சில அதிகாரிகளுக்கு அமைச்சின் அதி காரிகள் சிலர் கொலை அச்சுறுத் தலும் விடுத்திருந்தமை தெரியவந்




இராணுவத்தினரது ஏற்பாட்டில் யாழ். நகரில் மிகவும் கோலாகலமான முறையில் வெசாக் தினம் கொண்டாடப்பட்டது.

# ஓர் உறையில் உறங்கும் இருவாள்கள் ஒன்றையொன்று அறுக்குமா? நாடு பொறுக்குமா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பியினர் கூட்டுச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி பீடமேற்ற முடியுமென்ற நம்பிக்கையுடன் 12 ஆவது பாராளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீர் தேர்தலுக்கும் உத்தரவிட்டார். அதற்கேற்றாற் போல் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியான போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குப் பெரும்பான்மை கிடைப்பது பெரும் காரியமல்ல என்றே கருதப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 105 ஆசனங்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு (ஈ.பி.டி.பி) ஒரு ஆசனமுமாக 106 ஆசனங்களுடன் தான் புதிய அரசாங்கம பதவியில் இருக்கிறது.

13ஆவது நாடாளுமன்றத் பொதுத்தேர்தலில் 9 ஆசனங்களைக் கைப்பற்றிய ஜாதிக ஹெல உறுமயவும் புதிய அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து ஆதரவளிக்கப் போவதாக அறிவித்தது. ஜாதிகஹெல உறுமய, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்த போதிலும் அக்கட்சி அப்படி நடந்து கொண்டதாக இதுவரை தெரியவில்லை.

குறிப்பாக சபாநாயகர் தெரிவு மற்றும் அதற்கு முன்னரும், பின்னருமாக இடம் பெற்ற சம்பவங்கள் அனைத்தையும் உற்று நோக்குவோமானால் இந்த அரசு நீண்ட நாட்களுக்கு நிலைக்குமா என்ற சந்தேகமே வலுத்திருக்கிறது.

சபாநாயகர் தெரிவின் போது தாம் நடுநிலை வகிக்கப் போவதாக ஜாதிகஹெல உறுமய அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜாதிக ஹெல உறுமயவைப் பொறுத்த வரையில் புதிய அரசாங்கத்திற்கு வழங்கவிருந்த ஆதரவைத் தாமாகவே போட்டு உடைத்துவிட்டது சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், சபாநாயகர் தெரிவில் தாம் எப்படியும் வெற்றி பெறவேண்டும் என்ற வெறியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் நடத்திய நாடகங்களினால் தான் தற்போது இவ் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டிருக்கிறது.

பிக்குமாரைக் கொண்ட ஜாதிகஹெல உறுமய அரசியல் நீரோட்டத்தில் குதித்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தபோதே, அதற்கு எதிராக முதன் முதலில் குரல் கொடுத்ததும், மறுப்புத் தெரிவித்ததும் ஜே.வி.பிதான். ஜே.வி.பியினரைப் பொறுத்த வரையில் சிகப்புச்சட்டைச் சிந்தனைகளுடன் சிங்களப் பேரினவாதத் தேசியத்துக்குத் தலைமை தாங்கவேண்டும் என்ற குறியோடு செயற்பட்டு வருகின்றது.

> **இலங்கையில் வாழும் சிறு பான்மையினருக்கு உரிமைகளை வழங்கக்கூடாது. தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்பதில் ஒற்றுமை கொண்ட இந்த இரு சக்திகளும் ஒன்றிணைவதென்பது இலங்கையில் வாழும் சிறுபான்மையினர் உயிருக்கும் நலனுக்கும் ஆபத்தானது.**

ஜாதிகஹெல உறுமய கட்சியின் கொள்கைகள் அக்கட்சி முன்நிறுத்திய வேட்பாளர்கள் மக்களின் பேராதரவுத் தளம் என்பவற்றுடன் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இந்தக் கட்சி பெற்ற பெருவெற்றி, (9 பாராளுமன்ற ஆசனங்கள்) என்பவற்றைப் பார்த்த ஜே.வி.பி. தனது அரசியல் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஆபத்தானதாகிவிடும் எனக்கருதுவதில் நிறையவே அர்த்தம் உள்ளது. ஒரே உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது என்பது போலத்தான் இது.

ஜே.வி.பியும் சிங்கள (பேரினவாத) தேசியத்துக்குத் தலைமை தாங்கப்போவது யார் என்றநிலை ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகிறது. இதனால் தான் ஜாதிகஹெல உறுமயக் கட்சியைப் பிளவுபடுத்துவதிலும் அக்கட்சியுடன் முட்டி மோதுவதிலும் தீவிர அக்கறை காட்டி வருகிறது.

> **ஜாதிகஹெல உறுமய கட்சியின் கொள்கைகள் அக்கட்சி முன்நிறுத்திய வேட்பாளர்கள் மக்களின் பேராதரவுத்தளம் என்பவற்றுடன் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இந்தக் கட்சி பெற்ற பெருவெற்றி, (9 பாராளுமன்ற ஆசனங்கள்) என்பவற்றைப் பார்த்த ஜே.வி.பி. தனது அரசியல் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஆபத்தாகிவிடும் எனக் கருதுவதில் நிறையவே அர்த்தம் உள்ளது. ஒரே உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது என்பது போலத்தான் இது.**

பாராளுமன்ற சபாநாயகர் தெரிவின்போது இரண்டு பெரும்பான்மைக் கட்சிக்கும் ஆதரவளிக்காமல் நடுநிலைமை வகிக்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்திருந்த போதும் இக்கட்சியின்இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மறைத்து வைத்திருந்தனர். இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டு எப்படிப்பட்டாவது சபாநாயகர் தெரிவில் வெற்றி பெற வேண்டும் என ஆளும்கட்சி போட்டிருந்த திட்டங்கள் அனைத்துமே தவிடுபொடியாகி விட்டன.

தமது கட்சியை தக்க வைத்திருக்கவும், ஆளும் கட்சியினரைப் பழி தீர்க்கவும் இரண்டு பிக்குமார் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டாரவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் மூலம் சபாநாயகர் தெரிவில் ஆளும் கட்சி எடுத்து வைத்த முதலாவது அடியே தோல்வியில் முடிந் தது. இந்தப் படுதோல்வியினை ஆளும் கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் இன வாதக் கட்சியான ஜே.வி.பி.யால் மட்டும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதன் எதிரொலியாகவே ஜாதிக ஹெல உறுமய மீது ஜே.வி.பியும், பதிலடிக்கு ஜாதிகஹெல உறுமய ஜே.வி.பி. மீதும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள், கண்டங்கள், விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றன.

சபாநாயகர் தெரிவின் போது ஐக்கிய தேசியக் கட்சி சபாநாயகர் தெரிவுக்காக நிறுத்திய லொக்குபண்டாரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்து இருந்தது. அதேபோல் ஜாதிகஹெல உறுமயவும் ஆதரித்து இருந்தது. இதனடிப்படையில் இதையே யானை, புலி, பிக்கு, முஸ்லிம் கூட்டணி என்று ஜே.வி.பி. பிரசாரம் செய்தது.

சிங்களப் பேரினவாதிகளின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்ற ஜே.வி.பியினர், அதே சிங்கள மக்களால் வணங்கப் படும் பௌத்த மத குருமாரை இழிவுபடுத்துகின்றனர். 13ஆவது பாராளுமன்றத்தின் முதற்கூட்டத் தொடரில் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிககுகள் உரையாற்றிய போது, ஜே.வி.பியினர் கடதாசிகள், கோப்புகள் போன்றவற்றை வீசியெறிந்து தாம் அரசியல் நாகரிகத்தின் எத்தகைய நிலையில் நிற்கிறார்கள் என்பதை வெளிப்படுத் தியிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.யைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அரசியல் நாகரிகத்தை மதிப்பதாகத் தெரியவில்லை. பௌத்த மதகுருமார் அரசியலுக்குள் நுழைந்தது சரியோ, தவறோ என்ற விவாதம் ஒரு புறம் இருக்க, அவர்கள் கௌரவத்திற்குரியவர்கள் என்பதில் மாறுபாடு இருக்க முடியாது. ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குமாருக்கு இடையில் நடைபெறும் இழுபறி இரு பகுதியினருக்கும் இடையிலான முறுகலை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது.

பின்னர், எம்பிலிப்பிட்டியவில் ஜாதிகஹெல உறுமய எம்.பியான பௌத்த பிக்குவின் விகாரைக்கு முன்பாக கறுப்புக்கொடி கட்டப்பட்டமை, சுவரொட்டிகள் ஒட்டப் பட்டமை என்று ஜாதிக ஹெல உறுமயவுக்கு எதிரான வன் முறைகள் கடந்த மாதம் தீவிரமடைந்திருந்தன.

இது ஒரு தீவிரமான அரசியல் முறுகல் நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. பௌத்த பிக்குமாரைக் கடத்திச் சென்றது முதல், பிக்குகளுக்கு எதிரான வன்முறைகள் அனைத்துக்குமே ஜே.வி.பிதான் காரணம் என்று ஜாதிகஹெல உறுமயக் கட்சி வன்மையான கண்டனங்களைத் தெரிவித்தது.

காடுகளுக்குள் இருந்து வந்தவர்கள் என்றும், அரசியல் நாகரிகம் தெரியாதவர்கள் என்றும் கொழும்பில் இனவாதத்திற்கு வித்திட்டவர்கள் என்றும் ஜே.வி.பியை ஜாதிகஹெல உறுமய விமர்சனம் செய்திருந்தது. உண்மை நிலைவரம்

## நோயல்

என்னவெனில், இந்த இரண்டு தரப்புகளுமே தாம் சிங்கள மக்களின் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்பதில் தீவிர அக்கறை காட்டிவரு கின்றதே இந்த நீயா? நானா? போட்டிக்குக் காரணமாகும்.

இலங்கையில் வாழும் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்கக்கூடாது. தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்பதில் ஒற்றுமை கொண்ட இந்த இரு சக்திகளும் ஒன்றிணைவதென்பது இலங்கையில் வாழும் சிறுபான்மையினர் உயிருக்கும் நலனுக்கும் ஆபத்தானது.

இப்படிப்பட்ட சூழலில் இந்த இரு கட்சிகளும் தமக்குத் தாமே அடிபட்டுக் கொள்வது என்பது சிறுபான்மையினத்தவருக்கு நல்லதாக அமைந்தாலும், இந்த இரு சக் திகளுமே அரசியலில் அதாவது நாட்டில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தலைப்பட்டிருப்பது பெரும் அச்சுறுத்தலான விடயம் ஆகும்.

ஜாதிக ஹெல உறுமய - ஜே.வி.பி. நெருக்கடி நிலை என்பது இலங்கையின் அரசியல் ஸ்திரநிலைக்கு ஆபத்தானதாக இருப்பினும் அதைவிட தமிழ் பேசும் மக்களின் நலனுக்கும், தமிழ் தேசிய நலனுக்கும் இந்த சக்திகளின் வளர்ச்சி ஆபத்தானதாக அமையும். இப்படி இழுபறியான நிலையில் இந்த இரு கட்சிகளும் அடிபட்டுக் கொண்டு அவமானப்படுவது சிறுபான்மையினரைச் பொறுத்தவரையில் நன்மையாகவே நோக்கப்படுகின்றது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்றும், அவர்களின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கே ஆதரவு வழங்கத் தயார் என்றும் ஹெல உறுமய எடுத் திருக்கும் புதிய நிலைப்பாடு இலங்கையின் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலான கட்டத்திற்கு கொண்டு செல்லலாம்.

> **ஒருநாட்டின் அரசியல் என்பது அதிகாரத்திற்கான போட்டி மேடை. இந்தப் போட்டி மேடையில் கூறப்படும் கொள்கைகள், வழங்கும் வாக்குறுதிகள் ஆட்சிக்கு வந்தால் அல்லது பாராளுமன்றப் பதவி கிடைத்தால் செயலற்றுப்போய்விடும்.**

ஒருநாட்டின் அரசியல் என்பது அதிகாரத்திற்கான போட்டி மேடை. இந்தப் போட்டி மேடையில் கூறப்படும் கொள்கைகள் வழங்கும் வாக்குறுதிகள் ஆட்சிக்கு வந்தால் அல்லது பாராளுமன்றப் பதவி கிடைத்தால் செயலற்றுப் போய் விடும்.

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஜாதிகஹெல உறுமயக் கட்சியின் ஆதரவைப் பெறமுனையலாம். அவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்று ஆட்சி நடத்துமானால் அது தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்.

# முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டம் நோர்வே தூதுக்குழுவுடன் சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் -தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் ஊட்ட முனையும் நோர்வே இராஜதந்திரிகள் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட அங்கத்தவர்களை சந்தித்துப்பேசியுள்ளனர்.

பேச்சுவார்த்தையின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அதன் அரசியல் யாப்புக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்பட்சத்தில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாகக கலந்து கொள்ள வேண்டுமென நோர்வே இராஜதந்திரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்வதை அங்கீகரிக்க வேண்டும் எனப் பாராளுமன்றில் கடந்த மாதம் 22ஆம் திகதி வலியுறுத்தி இருப்பதையும் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-60,10)



யாழ்ப்பாணத்தில் உள்ள நினைவுச் சின்னங்களும் பேணப்படல் வேண்டும். முள்ளுகள் அற்று வெறும் காட்சிப்பொருளாக மட்டும் உள்ள யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள கடிகாரத்தைப் படத்தில் காணலாம்.

படம்:க.பவன்

# ஈழ இராஜ்ஜியம் அமைவதை தடுக்கவல்ல ஒரே ஒரு சக்தி நாமே

## மார்தட்டுகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

நாட்டின் ஈழ இராஜ்ஜியம் ஒன்று உருவாவதைத் தடுக்கக் கூடிய ஒரேயொரு சக்தியாக தாமே விளங்குவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய அண்மையில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இதில் கருத்துவெளியிட்ட அத்துரலிய ரத்தின தேரர்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யானை-புலி ஒப்பந்தத்தைப் போன்று இன்று வெற்றிலை - புலி ஒப்பந்தத்தின மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நாட்டைத் துண்டாட முனைகிறார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து செயற்படும் இந்த நிலையில் நாட்டில் ஈழ இராஜ்ஜியம் ஒன்று உருவாவதை தடுத்து நிறுத்தி நாடு பிளவுபடுவதிலிருந்து பாதுகாக்கும் ஒரேயொரு சக்தியாக ஜாதிக ஹெல உறுமயவே விளங்குகின்றது.

அத்துடன், பக்கச்சார்புடன் செயற்பட்டுவரும் நோர்வே, இலங்கையின் சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதினை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே தலையிடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அறிவிக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் பேச்சுவார்த்தை நடைமுறைகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் வெவ்வேறு கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன.

இதைவிட, இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் தெளிவானதொரு முடிவினைப் பெற்றுத்தரும் என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-18)

# கலைஞர்களின் ஒன்றுபடுதலை வலியுறுத்தி கொழும்பில் மே தினம்

## சலன சித்திரம் நடாத்தியது

(கொழும்பு)

சலன சித்திரம் திரைக் கலை அமைப்பின் மே தினக் கூட்டம் "உழைக்கும் உலகக் கலைஞர்களே ஒன்று சேருங்கள்!" என்ற தொனிப்பொருளில் கொழும்பு நகரின் வெள்ளவத்தைப் பொதுச் சந்தை மைதானத்தில் நடைபெற்றது.

தேசியக் கலை வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து அமரத்துவமடைந்த கலைஞர்களுககான மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் "சலன சித்திரம்" அமைப்பின் மாவட்டப் பிரதிநிதிகளான நீலன் மயில்வாகனம், சி.கயில்சேகரன், சு.லெ.ஹைதர், மபூஸ் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

மேலும் விரும்புவோர் கருத்துக்கூறும் விதமாக இக்கூட்ட மேடை திறந்த மேடையாக விடப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"சலனசித்திரம்" ஸ்தாபகர் க.தேவதாசன் அங்கு உரையாற்றுகையில்,

தன்மானம், சுயகௌரவம் மிக்க கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அரசியல்வாதிகள் முதல் ஆட்சியாளர் வரை எவருடனும் சம நிலையில் இருந்து பேச வேண்டும். கலை வளர்ச்சி, கலைஞர் உயர்ச்சி ஆகியவற்றை அடைய அஞ்சாநெஞ்சம் அவசியம். அதே வேளை, "கலை மக்களுக்காகவே" என நம்பும் உண்மைக் கலைஞர்களுக்கு ரோமாபுரியின் நீரோ மன்னன் ஒரு பொழுதும் முன்னுதாரணமாகிவிட முடியாது. அலங்கோலமாக நாடும், அவலமாக வீடும் உள்ள நிலையில் அலங்கரிக்கப்பட்ட அரங்குகளில் மே தினக் கூட்டங்கள் நடத்தப்படுவது அர்த்த மற்றது எனக் குறிப்பிட்டார். (உ)

# கலைக் கூடலில் தாக்குதல்

## ஹெல உறுமய உறுப்பினர்கள் மீது மேலதிக விசாரணைக்குப் பணிப்பு

(கொழும்பு)

சிங்கள-தமிழ் கலைக் கூடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய ஹெல உறுமய உறுப்பினர்களுக்கு எதிராக மேலதிக விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

தமிழ், சிங்களக் கலைஞர்களின் சமாதான வெளிப்பாடாகவே கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்பு நகர மண்டபத்தில் சிங்கள-தமிழ் கலைக் கூடல் இடம் பெற்றது.

இக்கலைக்கூடல் நிகழ்ச்சியில் திடீரெனப் புகுந்த பௌத்த குருமார்கள் உள்ளிட்ட ஹெல உறுமயவின் காடையர் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் மீது மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும், இது தொடர்பாக பிரதம நீதவானுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-4,63)

# காரைநகர் பொலிஸ் நிலையம் இடமாற்றம்

(காரைநகர்)

காரைநகரில் சக்கலாவோடையில் இயங்கிவந்த பொலிஸ் நிலையம் தற்போது காரைநகர் பிரதான வீதியில் தபாற்கந்தோருக்கு முன்பாகவுள்ள தனியார் கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக காரைநகர் பொலிஸ் நிலைய உதவிப் பரிசோதக அதிகாரி எஸ்.பி.வசந்த தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் தேர்தல் கால தற்காலிக பொலிஸ் நிலையமாகவே இது இயங்கி வந்தது. பொதுமக்களின் கோரிக்கையடுத்து, இது நிரந்தர பொலிஸ் நிலையமாக இயங்குவதற்கு மேலதிகமாக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு ஆளணி முழுமையாகக் கிடைத்த பின்னர் சகலவிதமான முறைப்பாடுகளையும் ஏற்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-246)

# கிழக்கு மாகாணத்திற்கு புதிய நேர அட்டவணை

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி, இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருடன் கலந்தாலோசனை செய்து தீர்மானித்ததன்படி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கான நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் வாயில்கள் என்பனவற்றைத் தினமும் இரவு 10.00 மணி தொடக்கம் அடுத்தநாள் அதிகாலை 5.00 மணிவரையும் பொதுமக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேதா பெரேரா கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள இச்செய்திக் குறிப்பில்,

இது விடயம் குறித்து இப்பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட உதவி அரச அதிபர் காரியாலயங்களுக்கும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதியன்று அறிவித்துள்ளதாகவும், விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் ஆயுதங்கள் மற்றும் அனுமதிக்கப்படாதவர்களின் வரவைத் தடுக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், நோயாளர் மற்றும் அவசரசிகிச்சை பெறுவோருக்குக் குறித்த நேரத்தில் விஷேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (யே)

# திலங்க சுமதிபால தாக்கல் செய்த மனு மீதான விசாரணை இன்று

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தன்னைப் பிணையில் விடுதலை செய்ய அனுமதிக்குமாறு கோரித் தாக்கல் செய்த மனுமீதான விசாரணை இன்று வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

தம்மைப் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என முன்னாள் கிரிக்கெற் அமைப்பின் தலைவர் அண்மையில் தாக்கல் செய்தமனுவைக் கடந்த திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

வழக்கில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி ஜசந்த கோதாகொட பிரதிவாதியான சட்டமா அதிபர் சார்பில் வாதிட்ட பிரதி சொலிஸ் ஜெனரல் சுகத ஹம்லத், நதி அமைச்சினால் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் விடயத்தைச் சுட்டிக காட்டினார்.

இதனால், வேறு ஒரு சட்டத்தரணியை நியமிக்கும் வரையும் விசாரணையைப் பின்போடுமாறு கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து இன்று வியாழககிழமை விசாரணையை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.(உ-60,10)

## தொலைபேசி மூலம் மிரட்டல்

யாழ்.குடாநாட்டில் தொலைபேசி மூலம் அச்சுறுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் இத்தகைய சம்பவம் குறித்து அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமக்கு எதிரானவர்களின் தொலைபேசி இலக்கங்களை அறிந்துகொள்ளும் சிலர் இவ்விதம் அச்சுறுத்தல் விடுத்துவருகின்றனர். இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இலங்கைப் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற கொண்டு வருகின்றனர். (உ-121)

## இன்று ஒரு தகவல்

# நிம்மதி எங்கே?

அந்தக காலத்தில் ஒரு ஞானி இருந்தார். அவரது பெயர் டயோஜனிஸ். ஆற்றங்கரை மணலில் சும்மா படுத்திருந்தார். அலெக்சாண்டர் இந்தியாவுக்கு புறப்படும் போது அவரைச் சென்று பார்த்தார். ஞானி அவரைப் பார்த்து "நீ எங்கே போகின்றாய்? எதற்காகப் போகின்றாய்?" என்று கேட்டார். "நான் ஆசியா மைனரை வெல்லப் போகிறேன்" என்றார் இவர். "அதன் பின் என்ன செய்யப்போகிறாய்" என்றார். "இந்தியாவை வெல்வேன்" என்றார். "அதற்குப் பின்?" என்று கேட்டார். அந்த ஞானி "உலகையே வெல்வேன்" என்றார். "உலகம் முழுவதும் ஜெயித்த பின்பு என்ன செய்யப் போகிறாய்?" என்று மீண்டும் கேட்டார். அதன் பின் நான் நிம்மதியாக ஓய்வெடுப்பேன் என்றார் அலெக்சாண்டர்.

இந்தப் பதிலைக் கேட்டதும் ஆற்று மணலில் படுத் திருந்த அந்த ஞானி சத்தம் போட்டுச் சிரித்தார். சிறிது தூரத்தில் படுத்திருந்த தனது நாயைக் கூப்பிட்டார். அது அவரின் அருகே வந்து நின்றது. ஞானி அந்த நாயிடம் சொன்னார். "பார்த்தாயா இவர் கூறுவதை? உலகம் முழுவதையும் ஜெயித்த பின்பு இந்த மனிதர் ஓய்வெடுக்கப் போகின்றாராம். ஆனால் நாமிருவரும் இங்கே ஒரு சிறிய இடத்தைக் கூட ஜெயிக்காமல் நிம்மதியாக ஓய்வெடுக்கிறோம்" என்றார்.

நாயிடம் இப்படிக் கூறிவிட்டு அதன்பின் அலெக்சாண்டரைப் பார்த்துச் சொன்னார். "இதோ பாரப்பா ஓய்வுதான் உனது இலட்சியம் என்றால் இந்த அழகிய ஆற்றங் கரையில் நீ எங்களுடன் இப்போதே சேர்ந்து கொள்ளலாமே. கடைசியில் ஓய்வு எடுப்பதற்காக ஏன் உலகம் முழுவதும் துன்ப துயரத்தை உணடாக்க வேண்டும் இப்போதே இங்கேயே நீ ஓய்வெடுக்கலாமே" என்றார்.

இதைக் கேட்டதும் அலெக்சாண்டர் ஒரு மாதிரி ஆகிவிட்டார். "நீங்கள் சொல்வது அறிவு பூர்வமாகத் தான் இருக்கிறது. ஆனால் நான் இப்போது ஓய்வு எடுக்க முடியாது. முதலில் உலகத்தை ஜெயித்து விட்டு வந்து விடுகிறேன்" என்றார்.

உலகை ஜெயிப்பதற்கும், ஓய்வெடுப்பதற்கும் சம்பந்தம எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே என்றார் ஞானி. "நீங்கள் சொல்வது நியாயம் தான். ஆனாலும் நான் ஏற்கனவே புறப்பட்டு விட்டேன். பாதி வழியில் பின்வாங்க வழியில்லை" என்றார். ஞானி சொன்னார். "நீ பாதி வழியில் திரும்பத்தான் போகின்றாய். ஏனென்றால் பயணம் முடிந்த பின யார் தான் இதுவரை திரும்பி வந்திருக்கிறார்கள்" என்றார்.

ஞானி சொன்ன தீர்க்கதரிசனம் தான் பலித்தது. நாடு திரும்பும் போது பாதி வழியிலேயே அலெக் சாண்டர் இறந்து போனான். இந்த நிகழ்ச்சியைக் கூறிய ஒரு பெரியவர் வாழ்வின் உண்மைகளை விளக்குகிறார். எல்லா அலெக்சாண்டர்களுமே இறந்து தான் போகின்றனர் என்கிறார் அவர்.

அவர்கள் செல்வங்களைச் சேர்க்கின்றார்கள். ஆனால் அதை அனுபவிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் எல்லா இசைக்கருவிகளையும் சேகரித்து விடுவார்கள். சரியான தருணத்தில் அதையெல்லாம் வாசிக்கின்ற சக்தியை அவர்கள் இழந்துவிடுவார்கள். கடைசியில் வெறும் கையுடன் ஒன்றும் செய்யமுடியாமல் அவர்கள் எல்லோரும் அழ ஆரம்பித்து விடுவார்கள். இன்று பலபேர் வாழ்வில் இதுதான் நடந்து கொண்டிரு க்கிறது. கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் நிம்மதி யைத் தேடிக் கழுத்தைச் சுற்றி வருகிறோம். அப்படிச்சுற்றி வந்து சேருவதற்குள் நிம்மதி காணாமல் போய்விடும்.

இந்தக் காலத்தில் ஒருவர் ஒருநாள் நடு ராத்திரி ஒரு சாலை வழியே வந்துகொண்டிருந்தார். வழியில் ஒருவர் அவரைப் பார்த்தார். "யார் நீங்கள்? இந்த ராத்திரி வேளையில் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார். "வாழ்வில் நிம்மதி இல்லாமல் போய் விட்டது. இப்போது நான் நிம்மதி தேடிப் போகிறேன்" என்றார் அவர்.

"அப்படியென்றால் என்னுடன் வூருங்கள் இங்கிருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் ஒரு ஆசிரமம் இருக்கிறது. அங்கே ஒரு சாமியார் இருக்கிறார். அவரிடம் சென்றால் நிம்மதி கிடைக்கும்" என்றார். அதற்கு இவர் சொன்னார் நன்றாகப் பார். நான் தான் அந்த சாமியார் அங்கும் நிம்மதி இல்லை. பொலிஸ் விசாரணை ஆரம்பமாகி விட் டது. அதுதான் புறப்பட்டு விட்டேன்" என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

## ஒய்வு பெற்ற ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில்

# கிராம அலுவலநூடாக முறையிடலாம்

(கொழும்பு)

ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் இராணுவ அதிகாரிகளும் தற்போது எதிர்நோக்கி வரும் சம்பள முரண்பாடுகளை நீக்குவது சம்பந்தமான மேலும் இரண்டு சுற்று நிருபங்களை வெளியிட்டிருப்பதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.ஏ. திலகரட்ண இது குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத்தெரிவிக்கையில்,

இந்தச் சுற்று நிருபங்களின் படி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள தமது சம்பள முரண்பாடுகள் பற்றி கிராம சேவை உத்தியோகர்த்தர்களின் ஊடாகப் பிரதேச செயலாளர்களுக்கு'முறையீடு செய்யலாம்.

அத்துடன், இதற்கான விண்ணப்ப் படிவங்களை கிராம சேவையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை, 1994ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களே பெரிதும் சம்பள முரண்பாடுகளை எதிர்நோக்குகின்றார்கள்.

இவர்களின் சம்பள முரண்பாடுகள் யாவும் நீக்கப்பட்டு இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் பின்னோக்கியதாக சம்பளமும் பாக்கிப் பணமும் வழங்கப்படவுள்ளது.

1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம்திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளும் இதே போன்ற சம்பள முரண்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் இவர்கள் பிரதேச செயலாளர்கள் மூலம் இராணுவ தலைமைக் காரியாலயத்திற்கு தங்களது சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு விண்ணப்பிக்க வேண்டும்.

இத்தகைய சம்பள முரண்பாடுகளை நீக்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு 200கோடி ரூபா மேலதிக செலவினம் ஏற்படுகின்றது.

ஆயினும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்களும் 25 ஆயிரம் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளும் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினையில் இருந்து விடுபடுகின்றனர் என்றார். (உ-60,10)

# கந்தப்பொல வன்முறைகளுக்கு ஐ.ம.சு.மு. அரசே காரணம்

## ஐ.தே.க. பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

கநதப்பொலவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே பொறுப்பு என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த திங்களன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக்கட்சி இந்தத் குற்றச்சாட்டை பகிரங்கமாக தெரிவித்தது.

கந்தப்பொல விவகாரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கடைப்பிடித்த மௌனம் காரணமாகவே மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டது.

இது தவிர, மலையகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம உரிய நடவடிக்கைகளை எடுக்க தவறிவிட்டது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடானது அதன் தகுதியின்மையையே சுட்டிக்காட்டுகிறது. அத்துடன், இத்தகைய வனமுறைச் சம்பவங்கள் இனிமேலும் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்ப தற்கான உறுதியான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எடுக்கவேண்டியது மிக அவசியமானது .

இந்த வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் அரசாங்கத்தை வலியுறுததியுள்ளது. (உ-63,18)

## இராசி பலன்

**06.05.2004**

**(சித்திரை 24, வியாழக்கிழமை)**

**துதியை முன்னிரவு-9.58 மணிவரை**

**அனுசம் முன்னிரவு-10.10 மணிவரை**

**இராகுகாலம் 1.25 - 2.55 மணிவரை**

**சுபநேரம் 7.25 - 8.55 மணிவரை**

**மேடம்**

**அமைதிக்குறைவு, வீண்பகை, உஷ்ண வியாதி, காரியதடங்கல்.**

**இடபம்**

**எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் வருகை, அபூர்வ சந்திப்பு, புதியமுயற்சி.**

**மிதுனம்**

**தேகாரோக்கியம், செய்தொழில் விருத்தி, பெரியோர் சந்திப்பு, பிரயாணம்.**

**கடகம்**

**கோபப்படுதல், முயற்சி தாமதம், உடல் சோர்வு, திடீர் நன்மை.**

**சிங்கம்**

**மனச்சஞ்சலம், புதிய தொழிற்பாடு, முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு.**

**கன்னி**

**நண்பர்கள் உதவி, பிரயாண நன்மை, போசனநன்மை, முயற்சி கைகூடும்.**

**துலாம்**

**அதிக செலவு, காரிய தாமதம், உணர்ச்சி வசப்படுதல், உடல் நலக்குறைவு.**

**விருச்சிகம்**

**சிந்தனை, மிகுதி உறவினர் சந்திப்பு, பிறர் உதவி, நல்ல முயற்சி.**

**தனுசு**

**வீண்மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, காரிய அலைச்சல், தனவிரயம்.**

**மகரம்**

**எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல வருமானம், போசன நன்மை, கீர்த்தி.**

**கும்பம்**

**அதிகாரம், பிறருக்கு உதவுதல், முயற்சி கைகூடும், தொழில் ஆர்வம்.**

**மீனம்**

**பிரயாணம், புதியதிட்டமிடல், சரீரப்பிரயாசை, காரிய தாமதம்.**

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

# புத்தளம் வாழ் தமிழர்களிடம் கப்பம் கேட்டு மிரட்டல்

## ஐ. ம. சு. மு. ஆத்ரவாளர்கள் கைங்கரியம்

(புத்தளம்)

புத்தளத்திலுள்ள தமிழ் மக்களிடமிருந்து கப்பம் திரட்டும் நடவடிக்கைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தமிழப் பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் மற்றும் வர்த்தகர்களை மிரட்டிப் பணம் பெற்று வருவதுடன் அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுவித்தும் வருகின்றனர்.

அத்துடன் கப்பம் கேட்டுச் செல்லும் இவர்களுக்குப பணம் வழங்காத பட்சத்தில் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# பிரதி சபாநாயகர் தெரிவு பற்றி ஹெல உறுமய ஆராயும்

(கொழும்பு)

இலங்கையின் நாடாளுமன்றத்திற்கான பிரதி சபாநாயகர் தெரிவு குறித்து ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆராயவுள்ளனர்.

இந்தக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம் பெறும் என ஜாதிகஹெல உறுமயவின் பேச்சாளார் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தின் இலங்கை நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் தெரிவு மற்றும் நாடாளுமன்றக் குழுத் தலைவா தெரிவு குறித்தும் ஆராயப்படும் எனவும் அவர் மேலும் தெரிவிததுள்ளார். (உ-121)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடாத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் ஆறாவது தொடர் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30மணிகது நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இக்கருத்தரங்கில் "இலங்கையின் இன்றைய அரசியல நிலமைகள்" என்னும் தலைப்பில் மு.திருநாவுக்கரசு (திருமாஸ்டர்) கருத்துரை வழங்கவுள்ளார்.

நீண்டகால இடைவெளியின் பின் மேற்படி ஆசிரியர் யாழ். மண்ணில் நடாத்த இருக்கும் இக் கருத்தரங்கில ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவர் றேட்டோ

(வாஷிங்டன்)

சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவராக ஸ்பெயின் நாட்டின் முன்னாள் பொருளாதார அமைச்சர் றொட்றிகோ றேட்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.


AFP PHOTO/FILE

உலகம் பூராவும் 184 நாடுகளுக்குக் கடனுதவிகளை வழங்கும் இந்நிதி நிறுவனத்திற்கு வழமைப்பிரகாரம் 60 வது முறையாக ஐரோப்பியர் ஒருவரே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 24 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழுவின் ரகசிய மற்றும் நேரடி வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெற்றார். 55 வயதான றேட்டோ, சர்வதேச நாணய நிதியத்தின் தலைவராகவும், நிர்வாக முகாமையாளராகவும், நிறைவேற்றுக்குழுவின் தலைவராகவும் 5 ஆண்டுகள் பதவி வகிப்பார்.

கடந்த மார்ச் மாதம் இந்நிறுவனத்தின் தலைவர் ஹோஸ்ட கோலர், ஜேர்மன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முகமாகத் தனது பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இப்பதவி வெற்றிடமானது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான பங்குதாரரான அமெரிக்கா றேட்டோவின் நியமனத்தை அங்கீகரித்து வாழ்த்துக் கூறியுள்ளது. அமெரிக்கத் திறைசேரிச் செயலர் ஜோன் ஸ்னோவும் அவருக்கு வாழ்த்துக் கூறியுள்ளார். மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் பாரிய பொருளாதார பிரச்சினைகளுக்கு றேட்டோ பெரிதும் ஊன்றுகோலாக இருப்பார் என்று மூன்றாம் மண்டல நாடுகளுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (யே)

# மியன்மார் எதிர்க்கட்சியினர் சூகியுடன் கலந்துரையாடல்

(யங்கூன்)

மியன்மாரின் பிரதான எதிர்க்கட்சியின் தலைவர்கள் தமது தலைவி ஆங் சாங் சூகியை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடியுள்ளனர்.


AFP PHOTO

மியன்மாரின் பிரதான எதிர்ககட்சியான ஜனநாயக தேசிய லீக்கின் தலைவர்கள், ஒருவருடத்திற்கும் மேலாகத் தடுப்புக் காவலிலும், வீட்டுக் காவலிலும் வைக்கப்பட்டிருக்கும் தமது தலைவி ஆங் சாங் சூகியைச் சந்தித்து ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக உரையாடினர்.

கட்சிச் செயலர் யு.எல் வின் இச்சந்திப்புப் பற்றிக் கூறுகையில் இம்மாதம் 17ம் திகதி யுன்ரா இராணுவ ஆட்சியாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்புப் பற்றிய மாநாட்டில் தமது கட்சி கலந்து கொள்வது பற்றி அவருடன் ஆராய்ந்ததாகவும், அவரை விடுதலை செய்து, நாடு முழுவதிலுமுள்ள தமது அரசியல் அலுவலகங்களை யுன்ரா இராணுவம் திறந்து விட்டால் மட்டுமே இப்பேச்சுவார்த்தையில் கலளந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (யே)

# மலேஷியர் தாய்லாந்தில்

(பாங்கொக்)

மலேசியத் துணைப்பிரதமர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று தாய்லாந்துடன் பேச்சுவார்த்தை நடத்து முகமாக அங்கு வந்து சேர்ந்தது.

தாய்லாந்தின் தென்பகுதி முஸ்லிம் மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் அமைதியீனங்களும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அகதிகள் பிரச்சினையும் உலகின் மிகப்பெரிய முஸ்லிம் நாடும் தாய்லாந்தின் அண்டை நாடுமான மலேசியாவுக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

“ஆசியாவின் ஆரம்ப உறுப்பு நாடுகளான இவ்விரு நாடுகளும் சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்றுக்கே தாம் தயாராவதாக அறிவித்துள்ளன.

# எயார் பிரான்ஸிடம் கே.எல்.எம். நிறுவனம்




(அமஸ்ரடாம்)

உலக பயணிகள் விமானப் போக்குவரத்தில் அமெரிக்கன் எயார்லைன் மற்றும் யுனைட்டட் எயார்லைன் ஆகியவற்றுக்கு அடுத்ததாக மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கும் நிறுவனம் டச்சு விமான நிறுவனமான கே.எல்.எம் நிறுவனத்தை உள்வாங்கியது.



(AFP PHOTO)

கே.எல்.எம் நிறுவனத்தின் 89 வீதமான பங்குகளை 997 மில்லியன் டொலர்களுக்கு வாங்கி உலகின் மிகப் பெரிய விமானப் பங்குச்சந்தைப் பேரத்தில் எயார் பிரான்ஸ் கைச்சாத்திட்டது.

540 பயணிகள் விமானங்களையும் 106,000 பணியாளர்களையும் கொண்டுள்ள கே.எல்.எம் நிறுவனம் 226 நகரங்களுக்குத் தனது சேவையை வழங்கி வருடமொன்றிற்கு 19.2 பில்லியன் யூரோக்களை வருமானமாகப் பெறுகிறது. இந்நிறுவனம் எயார் பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைவதால் எயார் பிரான்ஸ் மிக வலுவான நிலையை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (யே)

# பாக். கார்க் குண்டு வெடிப்பு 13 சந்தேக நபர்கள் கைது

பாகிஸ்தானின் குவெட்டா மாகாணத்தின் மிகவும் பின்தங்கிய கிராமமொன்றில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புத் தொடர்பில் 13 சந்தேக நபர்களை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இக்குண்டுவெடிப்பில் 3 சீனப் பொறியியலாளர்கள் உயிரிழந்ததுடன் 11 பொதுமக்கள் காயமடைந்தனர். இவ்வி வகாரம் தொடர்பில் விசாரணை நடதுமாறு சீன அரசாங்கம் பாகிஸ்தானைக் கோரி இருந்தது. கைது செய்யப்பட்டவர்கள் மிகவும் இரகசியமான ஒரு இடத்தில் வைத்து விசாரிக்கப்படுவதாகவும் குண்டுவெடிப் புக்கு எந்தவொரு இயக்கமும் உரிமை கோரவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. வெளிநாட்டவர் மீது நடாத்தப்படும் தாக்குதல்களுக்கு இஸ்லாமியத் தீவிர வாதிகளையே அரசாங்கம் குற்றம் சாட்டி வந்தது. ஆயினும் மிகப் பின் தங்கிய ஒரு கிராமத்தில் இடம்பெற்ற இத்தாக்குதல் களுக்கு யார் காரணம் என்பது பற்றி கண்டறிய இன்னமும் அரசாங்கத்தால் முடியவில்லை. ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பும், பிரதமர் ஸபருல்லாக் கானும் இதனை ஒரு பயங்கரவாதக் காட்டு மிராண்டித்தனம் என்று வர்ணித்துள்ளனர். ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரத மர் நவாப் ஷரீப்பின் அரசாங்கத்தைச் சதி மூலம் கைப்பற்றியவர் ஜனாதிபதி முஷாரப் என்பது குறிப்பிடத்தக்கது. (யே)


(CNN)

# 138,000 யு.எஸ். துருப்புக்கள் 2005 வரை ஈராக்கில்

(வாஷிங்டன்)

2005ம் ஆண்டுவரையும் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டும் பணிகளுக்காக 138,000 அமெரிக்கத் துருப்பினர் ஈராக்கில் நிலை கொண்டிருப்பர் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.


AFP PHOTO

துருப்புக்களை 115,000 ஆகக்குறைப்பது குறித்துப் பென்ரகன் ஆலோசித்த பொழுதும், அது பொருத்தமற்றதாக அமையாது என்று பாதுகாப்புச் செயலர் றொனால்ட் றம்ஸ்பீல்ட் அறிவித்திருக்கிறார்.

ஈராக்கில் அதிகரித்து வரும் நெருக்கடிக்களைச் சமாளிப்பதற்காக விஷேட பயிற்சி பெற்ற 10,000 துருப்புக்களையும், 37,000 தேசிய காவல் படையினரையும் மேலதிகமாக ஈராக்கிற்கு அனுப்புவது தொடர்பிலும் பென்ரகன் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அவர் சொன்னார்.

மிக அண்மையில் சுமார் 20,000 தேசிய காவல் படைவீரர்கள் தமது கடமைக் காலம் முடிந்து அமெரிக்கா திரும்பினர். இதுவரை 552 அமெரிக்க வீரர்கள் ஈராக்கில் போர் முனையில் தமது உயிரை இழந்துள்ள அதேவேளை, 437 அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் காயமடைந்துமுள்ளனர்.

ஈராக்கிய கைதிகள் கேவலமாக நடத்தப்படுவது தொடர்பில் பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ள போதும் அமெரிக்காவின் இந்த அறிவிப்பால் அரபுலகம் அதிருப்தியடைந்துள்ளது.

ஈராக்கில் கிளர்ச்சியாளர்கள் தமது தாக்குதலை மென்மேலும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இவ்வறிவித்தலைத்தொடர்ந்து ஏற்படலாம் என்று மத்திய கிழக்கு இராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது. (யே)

# மூன்று குண்டுகள் வெடித்தன அதென்ஸ் நகரம் அதிர்ந்தது

(கிரீஸ்)

நேற்று அதிகாலை கிரேக்கத்தின் தலைநகர் அதென்ஸ் நாகரின் மத்திய பகுதியிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தின் அருகில் அடுத்தடுத்து வெடித்த மூன்று குண்டுகளால் அதென்ஸ் நகரம் அதிர்ந்தது.



குறித்த நேரத்திற்கு வெடிக்கும் இரண்டு குணடுகள் 5 நிமிட இடைவெளியில் வெடி த்தது. மற்றைய குண்டு சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் வெடித்தது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அதென்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுக் கும் அதிகாரிகள் தங்கும் நட்சத்திர ஹோட் டல்கள் குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு மிக அருகிலேயே அமைந்துள்ளன.

பொலிஸ் நிலையத்திற்கருகில் குண்டு வெடித்திருப்பது சாதாரண விடயமல்ல. எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளைத் தீவிரவாதிகள் இலக்கு வைக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பததிரிகை நிறுவனமொன்றுக்கு வந்த அநாமதேயத் தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து குண்டுகள் வெடித்தன. இதில் ஒரு பொலிஸார் சிறுகாயங்களுக்குள்ளானார்.

இக்குண்டு வெடிப்பைத்தொடர்ந்து அதென்ஸ் நகரில் பொலிஸார் பாரிய தேடுதல் நடவடிக்கைகளில ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நகரில் நடத்தப்பட்ட தேடுதலில் சந்தேகத்தின் பேரில் பல முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டதாகவும் சிலருக்கு எதிராகச் சடட நடவடிக்கைகளை எடுப்பதில் பொலிஸார் முனைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (யே)

# மூன்றாம் கட்டவாக்களிப்பு இந்தியாவில் ஆரம்பமானது

(புதுடில்லி)

இந்தியப் பொதுத் தேர்தலின் மூ[illegible]ாம் கட்ட வாக்களிப்பு இந்தி[illegible]வின் வடபகுதி மாநிலங்களால் நேற்று ஆரம்பமானது.



ஏழு மாநிலங்களில் நேற்று முதல் ஆரம்பமாகியிருக்கும் மூன்றாம் கட்ட வாக்களிப்பில் 107 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.108,600 வாக்களிப்பு நிலயங்களில் மக்கள் வாக்களிக்கின்றனர். பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

543ஆசனங்களைக் கொண்ட கீழ்[illegible]பையில் 80 ஆசனங்களைக் கொண்ட மிகப் பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்திற்கான வாக்களிப்பம் இதில் அடங்கும். இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜபாயும்"இம் மாநிலத்தின் லக்னோத் தொகுதியிலேயே போட்டியிடுகிறார்.

இந்த மாநிலங்களில் ஆளுங்கட்சிக்கும் எதிர்க் கட்சிக்குமிடையில் கடும் போட்டி நிலவும் என்றும் பாரிய வித்தியாசங்கள் இருக்காது என்றும் கணிப்புகள் கூறுகின்றன. நான்காம் கட்ட இறுதி வாக்களிப்பு இம்மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும். (யே)

# காரணம் காட்டுமாறு அ.இ.அ.தி.மு.க்வுக்கு தேர்தல் ஆணையம் நோடடீஸ்

தேர்தல் நடத்தை விதி முறைகளை மீறிய காரணத்துக்காகப் புதுவை அ.இ.அ.தி.மு.கவின் அங்கீகாரத்தை ஏன் விலக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்கான காரணததை 7 நாட்களுக்குள் அளிக்க வேண்டுமென்று அ.இ. அ.தி.மு கவின் புதுவைத் தொகுதிச் செயலாளருக்குத் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப் பியுள்ளது.

அண்மையில் அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளரும் தமிழக முதலைமைச்சருமான ஜெயலலிதா புதுவையில் தேர்தல் பிரசாரம் செய்த போது பொது இடங்களில் கட்-அவுட், கொடிகள், போஸ்ரர் போன்றவை வைத்ததில் தேர்தல் விதிமுறை மீறப்பட்டிருப்பதே இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது. (து)



நேற்று ஆரம்பமான மூன்றாம் கட்ட வாக்களிப்பில் கலந்துகொண்ட பாரதிய ஜதாக் கட்சியின் ஆதரவாளர்கள் ஆர..வாரம் செய்வதைப் படத்தில் காண்கிறீர்கள்

# தேசியக் கூட்டணி ஆட்சி அமைப்பதை தவிர்க்க வி.பி.சிங் ஆலோசனை

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலில் எந்த ஒருஅணிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால், தேசியக் கூட்டணி,அமைப்பதைத் தடுக்க சமாஜவாதிக' கட்சித் தலைவர் மொலாயன்சிங் யாதவையும், மாயாவதியின் கட்சியினரையும், மத சார்பற்ற அணியில் இணைப்பதில் எவ்வித சிரமமும் இருக்காதென முன்னாள் பிரதமர் வி.பி. சிங் தொவித்துள்ளார்.

மத சார்பற்ற கட்சிகள் இந்தத் தேர்தல் காலத்தில் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். குறிப்பாக, காங்கிரஸ் மற்றும் இடது சாரிக்கட்சிகள் மிக அவதானமாக நடக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

செய்தியாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்த வி.பி.சிங் மேலும் தொடர்கையில்,

இந்த மதசார்பற்ற அணியை நடத்திச் செல்லக்கூடிய அரசியல் ஞானமும் அனுபவமும் லாலு பிரசாத் யாதவ், கருணாநிதி போன்றவர்களுக்கே உண்டு என்று தெரிவித்தார். (து)

**இந்தியச் செய்திகள்**

# சவப்பெட்டி ஊழல் பற்றி பேசுவதைத் தடை செய்யவேண்டும்

## ஜோர்ச் பெர்னாண்டஸ்

(புதுடில்லி)

சவப்பெட்டி ஊழல் சம்பந்தமாக தேர்தல் கூட்டங்களில் காங்கிரஸ் பேசிவருவதை தேர்தல் ஆணையம் தடைசெய்யவேண்டும் என்று இந்தியப் பாதுகாப்பு அமைசசர் ஜோர்ச்பெர்னாண்டஸ் கேட்டுள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கார்க்கில் போர் நடந்த பொழுது இந்திய இராணுவ வீரர்களின் சடலங்களை எடுத்துச் செல்ல சவப்பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்ட போது இடம் பெற்ற ஊழலில் பாதுகாப்பு அமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று முன்பு சொல்லப்பட்டது.

அதனையே இப்பொழுது தேர்தல் பிரசார மேடைகளில் காங்கிரஸ்காரர் சொல்லித் திரிவதைத் தடை செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையரிடம் பாதுகாப்பு அமைச்சர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதேவேளை,சவப்பெட்டி வாங்கியதில் எந்தவித நேரடித் தொடர்பும் ஜோர்ச்சிற்கு இல்லாத போது, தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் கூறிவருவது இராணுவ வீரர்களின் மனநிலையைப் பாதிக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (து)

# வாஜ்பாய், சோனியா, ஜெயலலிதாவிடம் பிடித்தது என்ன? கருணாநிதி பதில்

(சென்னை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'சன்' தொலைக்காட்சி நடத்திய தொலைபேசி மூலமான கேள்வி-பதில் நிகழ்ச்சியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கலந்து கொண்டார்.

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பொதுமக்கள் கட்சி பேதமின்றித் தொலைபேசி மூலம் கேள்விகளைக் கேட்டனர்.

அவற்றுக்குக் கருணாநிதி தனக்கேயுரிய பாணியில் நகைச் சுவையுடன் அதே நேரத்தில் ஆணித்தரமாகப் பதிலளித்தார்.

வாஜ்பாய், சோனியா, ஜெயலலிதா ஆகியவர்களிடம் பிடித்தது என்ன எனக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், வாஜ்பாயின் வாஞ்சையான நட்பு, சோனியாவின் பொறுமை, ஜெயலலிதாவின் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை என்று கருணாநிதி பதிலளித்தார். தொடர்ந்தும் கருணாநிதி அளித்த பதில்கள்



மக்களவைத்தேர்தல் வந்தபிறகு தேசிய ஜனநாயகக் கூட்டணியை நாங்கள் மாற்றிவில்லை.நாங்கள் வெளியே வந்த பிறகுதான் தேர்தல் வந்தது.மக்களவைத் தேர்தலை ஒட்டி கொள்கையின் அடிப்படையில் அமைந்த எங்கள் கூட்டணி சட்டப் பேரவைத் தேர்தலிலும் தொடரும். இக்கூட்டணியைப் பிளவுபடுத்திவிடலாம் என்று சிலருக்குத் தோன்றலாம். ஆனால், அதற்கு எங்கள் கூட்டணிக் கட்சிகள் பலியாகாது. மத்திய அமைச்சரவையில் இடம் பெறாமல் எங்களது முற்போக்கு அணியை ஆதரிப்போம். இதைத் தனிப்பட்ட கருத்தாக ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இதைக் கட்சி விவாதித்து முடிவெடுக்கும்.

தமிழகத்தில் உயராதது உயிரின் விலைதான். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக எல்லா விலைவாசி - கட்டண உயர்வு ஆகியவற்றை உறுதியாகக் கட்டுப்படுத்துவோம். அதேபோல, தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டங்கள் விலக்கிக் கொள்ளப்படும்.

ரேஷன் அட்டைகளைக் கொடுத்துவிட்டு அவற்றில் ஹெச் முத்திரையைக் குத்தி, எந்தப் பொருளும் இல்லை என்று கூறுவது கண்ணைக் கொடுத்து விட்டு, பார்வை இல்லை என்பதைப் போல உள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், கண்ணும் கிடைக்கும். பார்வையும் கிடைக்கும்.

காவிரிப் பிரச்சனை: மாநிலத்தின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க தேசிய நதிகளை இணைப்பதுதான் தீர்வு. கர்நாடகம், ஆந்திரம் ஆகிய அண்டை மாநிலங்களுடன் நல்லுறவு இல்லாததால்தான் தற்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறோம். அதற்கிடையில் நமது தேவையை நிறைவு செய்து கொள்ள அண்டை மாநிலங்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு அக்கறை எடுக்கவேண்டும். தி.மு.க ஆட்சியில் ராமநாதபுரம் நரிப்பையூரில் ரூ.72 கொடியில் 200 கிராமங்கள் பயன்பெறும் விதத்தில் கடல் நீரை நல்ல நீராக்கும் திட்டத்தை நிறைவேற்றினோம். அத்தகைய திட்டத்தை சென்னையிலும், இதர பகுதிகளிலும் நிறைவேற்றி இருந்தால், மக்கள் பலன் பெற்றிருப்பார்கள்.

ரூ.20 கோடியில் வீராணம் திட்டத்தை நிறைவேற்ற 1968-லேயே நடவடிக்கை எடுத்தோம். ஆனால், அது சாத்தியம் இல்லை என்பதால் நிறுத்தினோம். தற்போது ரூ.720 கோடியில் அ.தி.மு.க. அரசு மீண்டும் அத்திட்டத்தை ஆரம்பிக்க உள்ளது. பிடித்த கிரிக்கெற் வீரர்: கிரிக்கெற்றில் எனக்குப் பிடித்த உள்நாட்டு வீரர் பாலாஜி. வெளிநாட்டு வீரர் லாரா. (து)

# பி.ஜே.பி.கூட்டணியால் மட்டுமே நிலையான அரசமைக்க முடியும்

(புதுடில்லி)

பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணியால்தான் நிலையான அரசை அமைக்கமுடியுமென பிரதமர் வாஜ்பாய் கூறியிருக்கிறார்.



நேற்று முன்தினம் மத்திய பிரதேசத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பேசுகையில்,கடந்த 6 ஆண்டு காலப்பகுதியில் பின் தங்கியிருந்த நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுவந்தோம்.

இதேவேளை,விவசாயிகளுக்கு எதிரான கட்சி என்று எம்மை வர்ணிப்பதை வன்மையாக மறுக்கிறேன். என்று அவர் விவசாயிகள் நலனுக்காக தாம் எடுத்த நடவடிக்கைகளை பட்டியலிட்டுப் பேசினார். (து)

# அரசு அலுவலர், ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை

## பொய்ப்பிரசாரம் என்கிறார் ஜெயலலிதா

மக்களவைத் தேர்தலுக்குப் பின் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக எதிர்க் கட்சியினரின் பொய்ப் பிரசாரத்தை யாரும் நம்ப வேண்டாம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், தேர்தல் நேரத்தில் அரசு அலுவலர்களையும், ஆசிரியர்களையும் திசை திருப்புவதற்காக இப்படிப்பட்ட வதந்தியை உருவாக்கி வருகிறார்கள் என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது எந்தவித வெறுப்போ, காழ்ப்புணர்ச்சியோ தமக்குக் கிடையாது என்றும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் திட்டம் அரசுக்கு இல்லையென்றும் ஜெயலலிதா தெளிவு படுத்தியிருக்கிறார். (து)

# மனித உரிமைகளில் ஒன்று என்ற வகையில்

# கருத்து வெளியிடும் சுதந்திரம்~ஓர் ஆய்வு!

சண்முகலிங்கம்
சிவரூபன்
சட்டத்தரணி

மனித உரிமைகளில் ஒன்றான கருத்து வெளியிடும் சுதந்திரம் (Freedom of Expression) பற்றி ஐரோப்பிய மனித உரிமைகள் பிரகடனம் (Europian Charter of Human Rights)இன் உறுப்புரை 10 (1)இல் கூறப்பட்டு அதன் உறுப்புரை 10 (2) இல் மட்டுப் பாடுகளையும் விதிக்கிறது. அதேபோல் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (Univesal Declaration of Human Rights) இன் உறுபபுரை 19(1)இல் கூறப்பட்டுஅதன் உறுப்புரை 19(2)இல் மட்டுப்பாடுகளையும் விதிக்கின்றது. இலங்கையில் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் அத்தியாயம் III உறுப்புரை 14(1)(a)வெளியிடுதலுட்படப் பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரித்துடையதாகும் என்கிறது. எனினும் உறுப்புரை 15(2)ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும், தொழிற்பாடும்,இனச் சுமுக வாழ்வு,மதச் சுமுகவாழ்வு என்பவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மானநட்டம் அல்லது தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாக சட்டத்தினால் விதிக்கப்படும் மடடுப்பாடுகளுக் கமைவாகவோ இருக்க வேண்டும் என மட்டுப்படுத்துகிறது. மேலும் உறுப்புரை 15(7)மேற் கூறப்பட்ட அடிப்படை உரிமையானது தேசிய பாதுகாப்பு நலனடிப்படையிலும், சமூகக் கட்டுப்பாடு, ஒறறுமை, சமுதாய நல்வாழ்வு, ஏனையோரின் சுதந்திரத்தை பாதிக்காத வகையில்,ஜனநாயக சமுதாயத்தின் நலனடிப்படையிலும் உருவாக்கபபடும் சட்டங்களுக்கு அமைவாக இருக்க வேண்டும் என மட்டுப் படுத்துகிறது.

**Spy catcher** என்ற வழக்கில் இராணுவ அதிகாரி புத்தகம் ஒன்றை வெளியிவதற்கு பிரித்தானிய அரசு மறுப்புத் தெரிவித்ததால், அவர் பின்னர் அமெரிக்காவில் வைத்து அப்புத்தகத்தை வெளியிட்டமை, அமெரிக்காவில் இது பத்திரிகை சுதந்திரம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பிரித்தானிய அரசோ இராணுவ அதிகாரி புத்தகம் வெளியிடல் தேசிய நலனுக்குக் குந்தகம் என்பதால் அதனை வெளியிட மறுப்புத் தெரிவித்திருந்தது.

**Sunday Times** வழக்கில் பத்திரிகையில் ஒரு மருந்தைப்பற்றி விமர்சனம் செய்து எழுதியமை இங்கு மருந்துகளுக்கு விளம்பரம் செய்தல் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருப்பதால் மேற்படி விமர்சனம் விளம்பரம் என அதற்குத் தடை விதிக்கப்பட்டபோது எழுந்த மேற்படி வழக்கில் இது விளம்பரம் அல்ல எனவும் ஒரு மருந்தைப்பற்றி அதன் நன்மை,தீமை பற்றிய விமர்சனமே என்றும் இதுபொது நன்மை கருதி இவ் விமர்சனம் அவசியம் எனப்பட்டதால் இவ் விமர்சனம் சட்டப்படி தடைசெய்யக் கூடியதல்ல எனப் பட்டது.

**Udugampola** வழக்கில் தனிப்பட்டவர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை அவரின் அனுமதியோடு எழுதியமை தவறு அல்ல. அப்புத்தகம் தடைசெய்யப்படக் கூடியதல்ல எனப்பட்டது.

**Muller** வழக்கில் ஆபாச ஓவியம் வரைதல்,அவற்றை வெளியிடல்,சமூக நலனடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்டது.இங்கு இவ்வாறு ஆபாசங்களை அஞ்சல் அல்லது ஒலிபரப்பு செய்தல் என்பனவும் சமூக நலனடிப்படையில் பரந்த மட்டுப்பாட்டை விதிக்கப்பட வேண்டியது எனப்பட்டது.

**Groppera Radio VS A.G (Attorney-General)** வழக்கில் ஒருவரின் எண்ணங்கள் (Ideas), தகவல்கள் (Information) என்பவற்றை அஞ்சல் செய்தல், ஒலிபரப்புத் திரையரங்கில் வெளியிடல் என்பன போதனை மட்டுமன்றி திறமான நிகழ்ச்சி என்ற அடிப்படைகளில் சரியானது எனப் பட்டது.

**Leander** வழக்கில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்புனர் ஒருவர் வேலையின் நிமித்தம் அரசின் பாதுகாப்பு அறிக்கையை பார்வையிடக் கேட்ட போது அரசால் அனுமதி மறுக்கப் பட்டது. பாதுகாப்பு அறிக்கையை தேசிய பாதுகாப்புக் கருதி மட்டுமன்றி அவ்வாறு பார்வையிட அனுமதிப்பது அரசின் கடப்பாடும் அல்ல எனப்பட்டது.

**Gaskin** வழக்கில் உளரூராட்சியின் கீழ் பிறந்து வளர்ந்த ஒருவன் தான் சம்பந்தப்பட்ட பதிவேடுகளைப் பார்க்கக் கேட்டபோது பதிவேடு பார்க்க மறுக்கப்பட்டமை அது அவனுடைய உரிமை அல்ல எனபபட்டது.

**Autonic** வழக்கில் சுவிற்சர்லாந்தில் சோவியத்யூனியன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை ஒலிபரப்ப மறுக்கமுடியாது எனப்பட்டது. இது பொது அதிகாரிகள் தலையிடல் உறுப்புரை 10(2)இன் மட்டுப்பாட்டிற்குள் அடங்காது எனப் பட்டது. இங்கு வானொலி, தொலைக்காட்சி, திரையரங்கு என்பன அரசியல் ஏகபோக உரிமை என்பதாக உறுப்புரை 10(2) இன் கீழ் மட்டுப்படுத்தும் சுவிஸ் ,பிரான்ஸ் அரசுகளின் வழக்கு தோல்வியுற்றது.

எனினும் கருத்து வெளியிடுகையில் சுதந்திரத்திற்குப் பின்வரும் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

**(Handicide)**வழக்கில் ஆபாசப் புத்தகங்களை வெளியிட்டமை சிறுவர்நலன், பொறுப்புணர்வு என்ற அடிப்படையில் அவ்வாறு ஆபாசப் புத்தகங்களை வெளியிட இவ் வழக்கில் நீதிமன்றம் பரந்த மட்டுப் பாடுகளை விதித்தது.

**Lingans** வழக்கில் அரசியல் வாதியைப் பற்றி விமர்சித்தமை அது பத்திரிகையின் கடமை எனப் பட்டது.

**Austria** வழக்கில் ஐரோப்பிய சமூகம் தேசிய சோசலிஸம் பற்றிய கருத்தை மட்டுப்படுத்தியமை இந் நாடுகளின் பொதுப் பாதுகாப்பிற்கு அவசியமான மட்டுப்பாடாகக் கருதப்பட்டது.

**Swiss** வழக்கில் கேபிள் மூலமான தொலைக்காட்சிக்கு மறுப்புத் தெரிவித்தமை உறுப்புரை 10(01) மீறவில்லை எனப்பட்டது.

மக்களின் உடல் பாதுகாப்பிற்கு சிகரெட் விளம்பரத்திற்கான தடை அடங்கும்.உளப் பாதுகாப்பிற்கு **(Handicide)** வழக்கில் கூறப்பட்ட ஆபாசப் புத்தக வெளியீட்டிற்கான தடை அடங்கும்.

**Lingans** வழக்கில் **Austria** ஜனாதிபதியைப் பற்றி அரசியல் வாதி இவற்றை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக இவ்வாறு விமர்சித்தவரைத் தண்டிக்கக் கூடாது எனக் கூறப்பட்டது.

மேலும் பகிரங்க ஊழியர் ஒருவரைப்பற்றி,விமர்சிக்கலாம். எனினும் இவை அவர்கள் தம்மைப் பற்றி அவதூறு செய்ததாக அவதூறு வழக்கைத் தாக்கல் செய்வதைத் தடைசெய்யாது. எனினும் அவதூறு என்பதும் பொதுநலன் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்படும் எனலாம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவதூறு வழக்கில் வெற்றி அடையமுடியாது.

இங்கு கருத்துவெளியிடும் சுதந்திரம் பற்றிய அமெரிக்கக் கொள்கை யாதெனில் பொய்யை தெரிந்தும் எழுதுதல் குற்றம். உண்மை ,பொய் எதுவெனத் தெரியாவிடின் ஆராயலாம்.பொய் அல்ல எனின எழுதலாம். ஆனால் இவற்றை ஆராயும் பொறுப்பு பத்திரிகையாளருக்கு அல்ல எனலாம்.

பிரித்தானியாவின் கொள்கை யாதெனில் உண்மையை மட்டுமே எழுதலாம். மற்றைய சந்தர்ப்பங்களில் அது குற்றமாகும்.

கருத்து வெளியிடும் சுதந்திரத்தில், பத்திரிகை வெளியிடும் சுதந்திரத்தில் அரசு அச் செய்தியைத் தடுக்க முன்கூட்டியே கருதின் அரசுக்குக் கூடுதல் எண்பித்தல் பொறுப்புக் காணப்படும்.(**Burden of proof**)

**Newyork Times Co VS U:S** வழக்கில் வியட்நாம் யுத்தம் பற்றிய பென்ரகனின் அறிக்கையை வழக்காளி பத்திரிகையில் வெளியிட அரசு தடுத்தமை அதற்கான அரசின் எண்பித்தல் பொறுப்பு போதாது எனப்பட்டது.

**Attorney General VS Guardian Newspaper** வழக்கில் சுதந்திரமான அரசுக்கு பத்திரிகை சுதந்திரம் அவசியம். அதை அரசு மட்டுப்படுத்த நினைக்கும் போது நுணுக்கமாக ஆராய வேண்டும் எனப்பட்டது.

**Spy catcher** வழக்கில் கருத்துச் சுதந்திரத்தை அரசு அவதூறு சட்டம் மூலம் அல்லது அரச செயற்பாட்டிற்கு தேசிய நலன் அடிப்படையில் மேற்படி கருத்துச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தல் .இங்கு மேற்படி மட்டுப்பாடுகளை விதித்தல் மனச்சாட்சிக்கு முரண் எனின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை மட்டுப்படுத்த முடியாது. ஆனால் உரிய அதிகாரி இப் பிழையாக கருத்துச் சுதந்திர வெளிப்பாட்டைப் பற்றி உண்மை நிலையை தெளிவுபடுத்தலாம்.அல்லது தெளிவு படுத்தல் சம்பந்தமான அறிக்கையை வெளியிடலாம் எனப் பட்டது.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கான உறுப்புரை 15(7) இன் கீழான மட்டுப்பாடுகள் நிரந்தர மற்றது எனவும் உறுப்புரை 15 (2) இன் கீழான மட்டுப்பாடுகள் நிரந்தரமானது எனப்படுகிறது.

திலக்கருணாரட்ண வழக்கில் தமது கட்சியில் மாற்றுக் கருத்தை கொண்டிருந்தவரை கட்சியை விட்டு வெளியேற்றியமை அரசியல் யாப்பின் உறுப்புரை 14(1) (a) ஐ மீறிய செயலாகக் கருதப்பட்டு அவ்வாறு கட்சியை விட்டு வெளியேற்றியமை தவறு எனப்பட்டது.

**Nadesan** வழக்கில் பாராளுமன்ற சிறப்புரிமை பற்றி பத்திரிகையில் விமர்சனம் செய்திருந்தமைக்கு பாராளுமன்றம் எச்சரிக்கை விடுத்தமை பிழையானது எனப்பட்டது.

ஜினதாச வழக்கில் பத்திரிகையானது வன்முறையைத் துண்டக்கூடாது என்று கூறி இங்கு இப்பத்திரிகைச் செய்தி வன்முறையை தூண்டுவதாக இருக்கவில்லை எனப்பட்டது.

ஜோசப் பெரேரா வழக்கில் குடிமகன் ஒருவன் ஜனநாயகக் கருத்தை கூட்டத்தில் வெளியிடலாம் எனப்பட்டது.

**Romesh Thappar** வழக்கில் இக் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்தலை மட்டும் கட்டுப்படுத்த முடியாது எனப்பட்டது.

**S.L.B.C** வழக்கில் வானொலி தயாரிப்பாளர் மேலதிகாரியின் அங்கீகாரம் இன்றி தானே நிகழ்ச்சியை தயாரித்து ஒலிபரப்பியமைக்கு எதிராக குறித்த வானொலி தயாரிப்பாளரை வேலையை விட்டு வெளியெற்றியமை தவறு எனப் பட்டது.

எனவே இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரம் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் உறுப்புரை 14 (1)(a)இல் ,உறுப்புரை 15 (2), (7) இல் கூறப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கு அமைவாகவும் இலங்கை உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளுக்கு அமைவாகவும் மனித உரிமைகள் என்ற வகையில அல்லது அதன் ஒரு பகுதியான அடிப்படை உரிமை என்ற வகையில் பேணப்படுகிறது. இக்கருத்து வெளியிடும் சுதந்திரம் மீறப்பட்டால் உறுப்புரை 126 (1) இன் கீழ் இலங்கை உயர்நீதிமன்றத்திற்கு எழுதது மூலம் மனுச்செய்து பரிகாரம் பெறலாம்.இங்கு இது தொடர்பான அதிகாரம் வாய்ந்த தீர்ப்பை இலங்கை உயர்நீதிமன்றம் மட்டுமே வழங்க முடியும்.எனினும், உறுப்புரை 126(02) பாதிப்பு ஏற்பட்ட நபர் ஒரு (01) மாதத்திற்குள் அதாவது பாதிப்பு ஏற்பட்ட நாளிலிருந்து ஒருமாதத்திற்குள் (01)எழுத்து மூலம் மனுச் செய்து, உயர்நீதிமன்றம் உறுப்புரை 126 (5) இன் கீழ் இரண்டு மாதத்திற்குள்(02) விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும்.

இம்மனுவை பாதிக்கப்பட்ட நபர் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ செய்யலாம் என உறுப்புரை 126(02) கூறுகின்றது.தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழு மூலமாகவும் மனுச் செய்யலாம். இங்கு உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் அலுவலகத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

எனவே பாதிக்கப்பட்ட நபர் மேற்படி நியதிகள் மூலமாக உயர் நீதி மன்றத்தில் உரிய பரிகாரம் பெறமுடியும்.

---

## படையினர் வசமுள்ள

# கொல்லன்கிராய் வீதியை திறந்துவிடக் கோரிக்கை

(திருநெல்வேலி)

மறவன்புலோவிலிருந்து நுணாவிலூடாக சாவகச்சேரி செல்லும் கொல்லன் கிராய் வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுமாறு தென்மராட்சியில் உள்ள பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மறவன்புலோவிலிருந்து மிகவும் சுலபமாகச் சாவகச்சேரிக்குச் செல்லக் கூடிய மேற்படி வீதி நீண்டகாலமாக படையினரால் போக்கு வரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனால் மறவன்புலோவிலிருந்து சாவகச்சேரி செல்ல வேண்டிய மாணவர்களும் பொது மக்களும் பல மடங்கு தூரமான மாற்று வீதிகளையே பயன்படுத்தி வருகின்றதனால்,இவர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி வீதியை திறந்து பொது மக்கள் பாவனைக்கு விடவேண்டும் என தென்மராட்சிப் பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (உ-43)

---

## கந்தப்பொல சம்பவம்

## ம.உ.ஆ.கு.விசாரிக்கும

(நுவரெலியா)

கந்தப் பொலவில் கடந்தவாரம் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர் வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விசாரணைகளை நடத்தவுள்ளது.

இந்த விசாரணைகளுக்கு மலையகத்தின் அரசியல் வாதியும் பிரபல சட்டத்தரணியுமான ஒருவர் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

விசாரணைகளின் முடிவில் மனித உரிமைகள் ஆணைக்குழு நீதிமன்றம் ஒன்றில் வழங்குத் தாக்கல் செய்யவுள்ளது.(உ-10)

---

# வீடமைப்புக் கடனுக்கான வட்டி வீதம் குறைப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியில் இருந்து வீடமைப்புக் கடன் பெறும் ஊழியருக்கு,வட்டியை 16 சத வீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைப்பதற்கு வீடமைப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தீர்மானித்துள்ளார்.

முன்னர் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து கடன்களைப் பெறுவதற்கு உயர்ந்த வட்டிவீதம் செலுத்தப்பட வேண்டியிருந்ததால்,ஊழியர்கள் கடன் தொகையில் 50சதவீதத்தை வட்டியாக வழங்க வேண்டியிருந்தது.இந்த வட்டி வீதத்தை 40 வட்டிவீதமாக வழங்க உத்தேசித்திருக்கின்றோம்,

வீட்டைப் பழுது பார்ப்பதற்கு, காணி வாங்குவதற்கு அல்லது அடகுத் தொகையை மீளச் செலுத்துவதற்கு இக் கடன்னப் பெறமுடியும்.இக் குறைந்த வட்டி வீதமானது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வீடுகளைக் கட்டுவதற்கு வழிவகுக்கும் என்று அமைச்சர் அதாவுட செனவிரத்ன மேலும் தெரிவித்தார். (உ-121)

வினை செய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று -குறள்

வலம்புரி

## இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் எதற்கு!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இந்தியாவுக்கான விஜயம் இலங்கையின் சமாதான முயற்சியோடு சம்பந்தப்பட்டதெனக் கூறுவதிலும் பார்க்க இலங்கையின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டதெனக் கூறுவதே பொருத்தப்பாடானதாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசு பதவியேற்ற கையோடு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்த அவர் இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியாவின் பங்களிப்புத் தேவையெனக் கேட்டிருந்தார். அமைச்சர் கதிர்காமரின் கோரிக்கையை செவிமடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கா, இலங்கையின் சமாதான விடயத்தில் இந்தியா எந்தவகையில் தனது பங்களிப்பை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டிருந்தார்.

எனினும் ஜஸ்வந்சிங்காவின் கோரிக்கைக்கு பதிலளிக்காத கதிர்காமர் இந்தியாவின் பங்களிப்பு எந்தவகையில் இருக்கவேண்டும் என்பதை ஜனாதிபதியுடன் ஆராய்ந்த பின்னர் கூறுவதாகப் பதிலளித்தார்.

சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பங்களிப்பாற்ற வேண்டும் எனக் கேட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அந்தப் பங்களிப்பு எந்தவகையில் அமையவேண்டும் என்பது தெரியாமல் இருந்தமை வேடிக்கைக்குரியதாகும். கதிர்காமரைப் பொறுத்தவரை இந்தியா சமாதானத்திற்கு உதவவேண்டும் என்பது அவசியமல்ல. ஆனால் இலங்கையின் பாதுகாப்பிற்கு இந்தியா உதவவேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடாகும்.

இலங்கையில் பாதுகாப்பு விடயத்தில் இந்தியாவின் உதவியைப்பெறுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தைக் கட்டுப்படுத்தமுடியும் என புதிய அரசு நம்புகிறது. நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானமுயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் இந்தியாவின் பக்கபலத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலமே விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்பார்ப்பு. இதே எதிர்பார்ப்பை முன்னைய ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணியும் கொண்டிருந்தது. எனினும் ஐக்கிய தேசிய முன்னணி தனக்குப் பக்கபலமாக அமெரிக்காவை நாடி இருந்தது. இதற்கு முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

ஆக, இலங்கை அரசுகளைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதற்கு முன்னதாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குக்கூட தமக்கு ஒரு நாட்டின் துணை இருக்கவேண்டும் எனக் கருதுகின்றது. அதன் விளைவாகவே ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமெரிக்காவையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்தியாவையும் தமக்குப் பக்கபலமாக வைத்திருக்க விரும்புகின்றன. இதனடிப்படையிலேயே இலங்கை- இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் அமுலாக இருக்கின்றது.

இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதன் மூலம்புலிகளைப் பலவீனப்படுத்த சிங்கள அரசுகள் முயற்சிக் கின்றன. நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்ற அரசு, மிக அவசரப்பட்டு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய் வதற் குத் தயாராகுகின்றதெனில் அங்கிருக் கக்கூடியதான சூழ்ச்சிகள் சிந்திக்கப்பட வேண்டி யவை ஆகும்.

### சமாதானப் பேச்சில் நேரடிப் பங்களிப்பு

# இலங்கை அரசின் அழைப்புக் குறித்துப் பரிசீலிக்க இந்தியாவில் இப்போது சாதகமான சூழல் இல்லை

## தென்னாசிய விவகாரப் பேராசிரியர் கருத்து

(லண்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் பங்கு கொள்வது என்பது இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்க மட்டும் முடிவெடுக்கக் கூடிய சாதாரண விடயமல்ல என இந்தியாவின் ஜவகர்லாநேருப் பல்கலைக்கழகத்தின் தென்னாசிய விவகாரப் பேராசிரியர் பி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சி. தமிழ் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் வழங்கிய செவ்வியின் தொகுப்பு வருமாறு,

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிடாதிருப்பதே நல்லது என நான் கருதுகின்றேன்.

ஏனெனில் கடந்த காலங்களில் இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் தலையிட்டு இந்தியா பெரும் அவமானப்பட்டுவிட்டது.

இதனால் தான் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்க இந்தியா தயங்குகின்றது.

இதற்கிடையில்,இந்திய வெளியுறவு அமைச்சர் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதா? இல்லையா? என்ற முடிவை விரைவில் அறிவிப்பார் என இலங்கை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால் தற்போதுள்ள வெளிவிவ்கார அமைச்சர் ஜஸ்வந்சிங்க, தற்காலிகமாகவே அமைச்சராக இருக்கின்றார்.

இந்தியாவில் தற்போது தேர்தல் நடைபெற்று வருகின்றது. இதனால் புதிய அரசாங்கம் ஒன்று விரைவில் இந்தியாவில் உருவாகப்போகின்றது.

அவ்வாறு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் அந்த அரசாங்கமே இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஆற்றவேண்டிய பங்கு பற்றி ஆராயும்.

அத்துடன், புதிய அரசு ஆட்சிக்கு வந்தால் ஜஸ்வந்சிங்கவின் அமைச்சுப் பதவியும் பறிபோய்விடும்.

இதேசமயம், இந்தியாவில் புதிய ஒரு அரசாங்கம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிக்கு வந்தாலும் அந்த அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையில் தலையிடும் என்றும் எதிர்பார்க்கவும் முடியாது.

ஏனெனில், இலங்கைச் சமதானப்பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியா பயங்கரவாதிகள் என்ற முத்திரையைக் குத்தி தடைவிதித்துள்ளது.

இதனால்,விடுதலைப்புலிகள் தம்மீதான தடையை இந்தியா நீக்கினால்தான் சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியா பங்கு கொள்வதை அனுமதிப்போம் என்ற நிபந்தனையை இலங்கை அரசுக்கு விதித்து விடுவார்கள்.

இதற்கிடையில், புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்க இந்தியாவில் ஆட்சி அமைக்கப்போகும் புதிய அரசு விரும்பினாலும் அந்த அரசின் எதிர்க்கட்சித்தரப்பினர் அதற்கு இணங்கமாட்டார்கள்.

குறிப்பாக அகில இந்தியக் காங்கிரஸ் ஆட்சியமைத்தால் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க ஒரு போதும் அனுமதிக்கமாட்டாது. (உ-62,10,121)

# ஜனாதிபதி –ஜே.வி.பி. கருத்து முரண்பாடு சமாதான முயற்சிக்குப் பெருத்த பின்னடைவு

## அரசியலாளர்கள் அச்சம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கூட்டுக் கட்சியான ஜே.வி.பி.யினரின் வெளிப்படையான முரண்பாட்டுக்கு உள்ளாகியிருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் நோர்வேயின் மத்தியஸ்தம் விடுதலைப் புலிகளுக்கே சாதகமாக அமையுமெனக் கூறும் ஜே.வி.பி., தனது அண்டைய நாடும், தமது வரலாற்றுப் பாரம்பரியங்களுடன் நீண்ட நாள் தொடர்புடையதுமான இந்தியாவை மத்தியஸ்தம் செய்ய அழைப்பது நன்று எனக் கூறியிருப்பதுடன், நோர்வேயை விடவும் இந்தியாவின் மத்தியஸ்தம் சிறப்பானது எனவும் தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்தியாவைக் கண்காணிப்பாளராகவும், நோர்வேயை ஆலோசனை வழங்குபவராகவும் ஏற்றுக் கொள்ளுமாறு ஜே.வி.பி. ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஆலோசனை கூறியிருந்தது.

அதற்கு இதுவரையும் அவரிடம் இருந்து பதில் கிடைக்காத நிலையில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களின் போது ஜே.வி.பி தரப்பினால் தடைகள் ஏற்படலாம் என அரசியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இது பற்றி ஜே.வி.பி. பிரசாரச் செயலர் எதுவித கருத்தும் வெளியிடாது உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

# அரிசி விலை அதிகரிப்பை தடுக்க மாற்று வழிமுறை

(கொழும்பு)

அரிசியின் விலை தொடர்ந்தும் அதிகரித்தால், அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுமென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக அரிசியின் விலை அதிகரித்துள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடைத்தரகர்கள் சிலர் நெல்லைப்பதுக்கி வைத்துள்ளனர். இதனாலேயே அரிசியின் விலை அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-61,10)



### சாயி அருளமுதம்

**உங்களை இகழ்பவர்களிடமும் நீங்கள் பதிலாக அன்பு காட்ட வேண்டும். அதுவே நமது மதம் காட்டும் சிறந்த பண்பாடாகும். கடவுளின் அவதாரங்கள் அவ்வாறு நடந்து காட்டியுள்ளன. எல்லா ஜீவராசிகளிலும் இறைவன் வதிகிறார். அதனால் ஜீவனுக்கு செய்யப்படும் சேவைகள் யாவும் இறைவனுக்குச் செய்யப்படுபவையே.**

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# சொத்துக்கள் வீண் விரயம் விசாரணைக்குப் பணிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் சொத்துக்கள் வீண் விரயம் செய்யப்படுவது குறித்து பரிசீலனை மேற்கொள்ளுமாறு மத்திய மாகாண சபையின் ஆளுநர் மொண்டி கோபல்லாவிடம் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் ஆளுநர் வஸந்த அலுவிகார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்களைத் துஷ்பிரயோகம் செய்வது குறித்து முறைப்பாடுகள் செய்தமையை அடுத்தே அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டிருப்பதால் அதன் வாகனங்களை உபயோகிப்பது சட்ட விரோதமானதாகுமென்பதால் ஆளுநரை இதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் தென்னக்கோன் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-121)

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றி அரசியல் யாப்பை மாற்றியமைக்க முடியும்

## ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆணையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் வழங்கியிருப்பதால் எந்தவிதமான தாமதங்களும் இன்றி அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்படல் வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

தேசிய ஊடகம் ஒன்றில் நேற்று உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1978ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை மாற்றி அமைக்க வேண்டியதேவை ஏற்பட்டிருக்கிறது. இதற்குரிய ஆணையை கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலூடாக மக்கள் வழங்கியுள்ளனர். இவ்வாறு மாற் றத்தை உருவாக்குவது நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளையும் பெற்றுத்தரும்.

அரசியல் யாப்பை மாற்றியமைப்பதற்கான மக்கள் ஆணையைவென்ற தற்போதைய அரசினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றியே அரசியல் யாப்பை மாற்றி அமைக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,63)

உள்நாட்டு.வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P : 0602212472

# புலிகள் இல்லாத சமாதானப் பேச்சு அர்த்தமற்ற ஒன்று

## இரா. சம்பந்தன் கருத்து

(கொழும்பு)

சர்வதேச நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழி



முறையாக சமாதானப் பேச்சு வார்த்தைகள் அமையக் கூடாது என்று நோர்வே சமாதான ஏற்பாட்டுக் குழுவிடம் தாம் வலியுறுத்தியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தில் வைத்து நோர்வே சமாதானக் குழுவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் ஊடக வியலாளர் மத்தியில் கருத்துக் கூறிய போதே சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வரை பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும். முஸ்லிம் சமூகத்தினரை அரவணைத்து செல்லக் கூடிய வகையில் அழுத்தமாகவும் தெளிவாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு கட்சியுடனும் நடத்தப்படுமாயின் அது பேச்சு வார்த்தைகளை அர்த்தமுள்ளதாக்காது என்று தெரிவித்த அவர், ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப்புக்களைத் தாம் வரவேற்பதாகவும், நோர்வே தூதுக் குழுவிடம் தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்ததாகவும் மேலும் குறிப்பிட்டார். (உ-121)

# இலங்கையில் புகைத்தலால் 20 ஆயிரம்பேர் இறக்கின்றனர்

## உலக சுகாதார நிறுவனம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் புகைத்தலால் 40 வீதமானோருக்கு புற்று நோய்களும் 50 வீதமானோருக்கு இருதய நோய்களும் ஏற்படுகின்றன என ஆய்வுகள் தெரிவித்துள்ளன. அத்துடன் புகைத்தல் காரணமாகவே இலங்கையில் ?பர் வலிப்பு நோய்களும் 80 வீதமானோருக்கு நுரையீரல் நோய்களும் ஏற்படுகின்றன என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

இவை காரணமாக இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 20 ஆயிரம்பேர் இறக்கின்றனர். இதைவிட புகைத்தலால் ஏற்படும் வேறு நோய்களால் வருடம் ஒனறுக்கு ஆயிரத்து 500-2 ஆயிரம் பேர் இலங்கையில் மரணம் அடைகிறார்கள் என உலக சுகாதார நிறுவன ஆலோசகர் சஞ்சீவ ரணவீர தெரிவிக்கிறார்.

இதேவேளை வருடம் ஒன்றிற்கு இலங்கையர்கள் 20ஆயிரம் மில்லியன் ரூபாவை புகைத்தலுக்காக செலவழிக்கின்றார்கள். புகைத் தலை தடைசெய்ய ஒரு நாள் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பினும் அன்றுமட்டும் அவர்கள் புகை த்தலை தவிர்த்து விட்டு பின் வருடம் முழுவதும் அதே தவறை தொடர்ந்து செய்தே வருகிறார்கள் என ரணவீர தெரிவித்தார். (ச-6)

# சமாதானத்தை வெல்வதில் ஐ.தே.கவுக்கும் பொறுப்பு உண்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகளை வெற்றி பெறச் செய்யும் பொறுப்பில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகமுடியாதென பிரதிச் சபாநாயகர் றோகண் திஸ்ஸ நாயக்கா தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் வணக்க ஸ்தலம் ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும், விடு தலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் போது ஐக்கிய தேசியக்கட்சி அதனை வெற்றி பெறச் செய்யும் வகையில் பாடுபட வேண்டும்.

சகல தரப்புக்களினதும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து கௌரவமான சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்திய இடத்திலிருந்தே அதனை ஆரம்பிப்பதற்கு தற்போதைய அரசு தயாராக இருப்பதாகவும் றோகண திஸ்ஸ நாயககா மேலும் கூறினார். (இ-121)

# தொல்பொருள்கள் களவாடிய நால்வர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

பொலநறுவைப் பகுதியிலிருந்து விலை மதிக்க முடியாத தொல் பொருட்களை களவாடிய நான்கு பேரை வவுனியாப் பொலிஸார் நேற்று முன்தினமிரவு கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து ஐம்பொன்னினாலான பிள்ளையார் சிலை ஒன்றும் பார்வதிசிலை ஒன்றும் நடராஜர்சிலை ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

வவுனியா பாவற்குளம் பகுதியில் புதைபொருட்களை அகழ்ந்தெடுத்தமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்தபோது மேற்படி நபர்கள் தொடர்பான தகவல் கிடைத்ததையடுத்து விஷேட பொலிஸ் குழு ஒன்று பொலநறுவைக்குச் சென்று பிரஸ்தாப நபர்கள் நால்வரையும் கைது செய்துள்ளது.

மேலும் இவர்களிடமிருந்து யானைத் தந்த முத்துக்கள் 33 ஐயும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# உல்லாசப் பிரயாண, முதலீட்டு பிரதி அமைச்சராக இன்று அர்ஜுனா பதவியேற்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் முன்னாள் இலங்கைக் கிரிக்கெற் அணித் தலைவர் அர்ஜுனா ரணாதுங்காவிற்கும் இடையே நிலவி வந்த முரண்பாடுகள் யாவும் தீர்க்கப் பட்டுவிட்டதென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி அர்ஜுனா ரணதுங்கா இன்று உல்லாசப் பிரயாண, கைத்தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சராக பதவியேற்கின்றார்.

தனக்கு விளையாட்டுத்துறை அமைச்சை வழங்குவது என ஜனாதிபதி உறுதியளித்திருந்தும் பின்னர் அதனை வழங்காமல் விட்டுவிட்டார் என ஜனாதிபதியுடன் அர்ஜுனா முரண்பட்டுக் கொண்டே தனக்கு வழங்கப்பட்ட பிரதி அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்காமல் இருந்தார். இந் நிலையிலேயே அர்ஜுனா கடந்த திங்கட்கிழமை நுவரேலியாவில் ஜனாதிபதியைச் சந்தித்து உடன்பாடொன்றைக் கண்டிருந்தார் என்று தெரிவிக்கப் படுகின்றது. அதன் பின்னரே அவர் தனக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பை ஏற்கவிருக்கிறார். (ச-6)

## பஸ் விபத்தில் 18 பேர் காயம்

(கொழும்பு)

திருத்தல யாத்திரைக்கென பக்தர்களை ஏற்றிக்கொண்டு கதிர்காமத்தில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்வண்டி கண்டி தலாத்து ஓயா பகுதியில் விபத்துக்குள்ளாகியது.இந்த விபத்துச் சம்பவத்தில் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் கண்டி மானஸ்தென வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் (இ-121)

## 125வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் 125வது ஆண்டு நிறைவுநாள் சிறப்பு நிகழ்வுகள் இன்று காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் செல்வி பாக்கியலச்சுமி மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் "கோநகரப் பொழுது" என்னும் சிறப்பு மலர் அறிமுக நிகழ்வும் இடம்பெறும். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சோ. பதமநாதன் நூல் அறிமுக உரையை நிகழ்த்துவார் (ச)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

பளை இத்தாவில் புனித பார்பரம்மா ஆலய வருடாந்த பெருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 8ந் திகதி சனிக் கிழமை மாலை 6மணிக்கு நற்கருணை ஆராதனையும், 9ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (த)

## கண்டி இங்கிரியவில் கைகலப்பு ஒருவர் பலி: 6பேர் காயம்

(கண்டி)

கண்டி இங்கிரியவில் உள்ள எதுரகல தோட்டத்தில் இரு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற கைகலப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 6பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிமுத்து (வயது39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த 6 பேரும் இங்கிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது. இதனால் பாதுகாப்புக்கடமைகளை அதிகரிக்குமாறும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எஸ். செல்லச்சாமி பொலிஸ்மா அதிபர் இந்திரா டீசில்வாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-4,60)

## வவுனியாவில் 4 சிறுமிகளை காணவில்லை

(வவுனியா)

வவுனியாவில் 4 சிறுமிகளைக் காணவில்லை என அவர்களது பெற்றோர்களால் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த 3ம் திகதி பூந்தோட்டம் முகாம் பகுதியிலிருந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு சென்ற சிறுமிகளே காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் காணாமல் போனமை தொடர்பாக வவுனியா மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழு மற்றும் பொலிஸ் நிலையம் எனபன வற்றிலும் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (ச)

## திருமலை அரசியல்துறை பொறுப்பாளராக எழிலன்

(வவுனியா)

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக கடமையாற்றிவந்த திலக் வன்னிக்கு அழைக்கப்பட்டதையடுத்து அவரது இடத்திற்கு வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் நியமிக்கப்பட்டுள்ளார் இதேவேளை,

புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளராக ஞானவேலு நியமிக்கப் பட்டுள்ளார்என அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். (ச)

## திருநெல்வேலியில் புராதனகால சிலை கண்டெடுப்பு

(கந்தர்மடம்)

திருநெல்வேலி கெனடிலேன் உள்ள வைரவர் ஆலய பகுதியிலிருந்து மிகவும் பழமைவாய்ந்த புராதன காலத்து சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வைரவர் ஆலயத்தை புனரமைப்பு செய்வதற்காக சிரமதானம் செய்தபோதே இச் சிலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

2அடி உயரமும் 1அடி அகலமும் கொண்டதாகக் காணப்படும் அச்சிலை அரத்தநாரஸ்வர வடிவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. கண்டெடுக்கப்பட்டுள்ள புராதன காலத்துச் சிலையை பெரும் திரளான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ச-85)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலக ஏற்பாட்டில் இன்று மாலை 5.30 மணிக்கு நல்லை நாவலர் மணி மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆன்மீகச் சொற்பொழிவில், திணைக்களத்தின் பணிப்பாளர், திருமதி சாந்தி நாவுக்கரசன் வாழ்த்துரையும்,

"உளத்தாக்கங்களும் தீர்வுகளும்" எனும் தலைப்பில் யாழ் போதனா வைத்திய சாலை உள மருத்துவத் துறையைச் சேர்ந்த திருமதி சாவித்திரிதேவி ரவிச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவையும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## கடமை பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக திருமதி பற்றீசியா இன்று தனதுடமையை பொறுப் பேற்கவுள்ளார்.இவர் ஸ்கொட்லாந்திலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்

## இனப்பிரச்சினைக்கு...

பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுத்தவர்கள் என்ற வகையில், விட்ட இடத்திலிருந்து பேச்சு வர்த்தைகளை ஆரம்பிப்பதில் எமக்கு எந்த கருத்துவேறுபாடும் இல்லை.

மேலும் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார திட்ட வரைபின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை முனனெடுப்பதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்காது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த சனிக் கிழமை இலங்கை வருகைதந்திருந்த நோர்வே சமாதானக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழ் தேசியக் கூட்ட மைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் சந்திப்புக்களை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (த-121)

## தலைவர் பிரபா..

துரிதப் படுத்தி விடயங்களை நிரல்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நோர்வே குழுவினர் சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய பல தரப்பினருடனும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் சமாதான முயற்சிகளை நெறிப்படுத்தும் நோக்கில் இலங்கை வரும் அமைச்சர் ஜோன் பீற்றர்சனிடம் வடக்கு கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதான பேச்சு வார்த்தைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதை தலைவர் வே. பிரபாகரன் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது. (இ)

## மண்டதீவில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு ஆதிவைரவர் (ஆலடிவைரவர்) கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுகின்றது. காலை 6.30 மணியளவில் ஸ்தூபிக்கும், 7மணியளவில் மூலமூர்த்திக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். (ந)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.